

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 58 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 20 – சனிக்கிழமை 07 அக்டோபர் 2023 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 58 : Thiruvalluvar Year - 2054 - Purattasi 20 - Saturday 07 October 2023 - Trichy ★★ 12 Pages ₹ 5.00


## பொறுப்புள்ளவராகக் கருதப்படும் பிரதமர்

# அவதூறான செய்திகளைப் பரப்புவதா?

## “வள்ளலார் -200” ஓராண்டு தொடர் அறநிகழ்வின் நிறைவு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி!

**சென்னை, அக்.7–**

**“பொறுப்பு வாய்ந்த இந்திய நாட்டின் பிரதமர் அவர்கள் தவறான அவதூறுச் செய்தியைச் சொல்வது சரியா? ஒரு மாநிலத்தின் செயல்பாடு குறித்து இன்னொரு மாநிலத்தில் போய் பேசுவது முறையா? தர்மமா?” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘வள்ளலார் – 200’ ஓராண்டு தொடர் அறநிகழ்வின் நிறைவு விழாவில் உரையாற்றும் போது கேள்வி எழுப்பினார்.**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.10.2023) இந்து சமய அறநிலையத் துறை சார்பில் சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற “வள்ளலார் – 200” ஓராண்டு தொடர் அறநிகழ்வின் நிறைவு விழாவில் ஆற்றிய உரை வருமாறு:**

“ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும் ஒருமை உளராகி உலகியல் நடத்தல் வேண்டும்” என்பதை அறநெறியாகக் கொண்டு வாழ்ந்து காட்டிய, அருட்திரு வள்ளலார் அவர்களின் 200ஆவது ஆண்டைச் சிறப்பிக்கும் வகையில், ”தனிப்பெரும் கருணை நாளில்” இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த இனிய விழாவில் கலந்து கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.10.2023) இந்து சமய அறநிலையத் துறை சார்பில் சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற “வள்ளலார்–200” ஓராண்டு தொடர் அறநிகழ்வின் நிறைவு விழாவில். கடலூர் மாவட்டம், வடலூரில் 99 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள வள்ளலார் சர்வதேச மையத்திற்கான ஆணையினை வள்ளலார் முப்பெரும் விழா சிறப்புக் குழுவின் தலைவர் முனைவர் பி.கே.கிருட்டிணராஜ் வானவராயர் அவர்களிடம் வழங்கினார். இவ்விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன். திருவாவடுதுறை ஆதீனம் சீர்வளர்சீர் அம்பலவாண தேசிகர் பரமாச்சாரிய சுவாமிகள், குன்றக்குடி ஆதீனம் சீர்வளர்சீர் பொன்னம்பல அடிகளார், பேரூர் ஆதீனம் சீர்வளர்சீர் மருதாச்சல அடிகளார், சிரவை ஆதினம் சீர்வளர்சீர் குமரகுருபர சுவாமிகள். மயிலம் பொம்மபுர ஆதீனம் சீர்வளர்சீர் சிவஞானபாலய தேசிகர், வேளாக்குறிச்சி ஆதீனம் சீர்வளர்சீர் சத்திய ஞான மகாதேவ தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், சூரியனார் கோயில் ஆதீனம் சீர்வளர்சீர் மகாலிங்க தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன். இந்து சமய அறநிலையத்துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளிதரன், கூடுதல் ஆணையர் அ.சங்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பொதுவாக நூற்றாண்டு விழா என்றாலோ, பிறந்தநாள் விழாக்கள் என்றாலோ, அந்த குறிப்பிட்ட நாளில் மட்டுமே கொண்டாடுவார்கள். ஆனால் ‘செயல்பாபு’ என்று என்னால் அன்போடு அழைக்கப்படக்கூடிய அமைச்சர் சேகர்பாபு அவர்களோ, மாதம் முழுவதும் – ஆண்டு முழுவதும் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களது நூற்றாண்டு விழாவை நாள்தோறும் நடத்திக் கொண்டு இருக்கிறார். மாதந்தோறும் விழாக்கள் நடத்தினால்தான் அவருக்கு திருப்தி!

ஏதோ கணக்குக்காக – கடமைக்காக அல்ல; எதையும் உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் நடத்துவார். அவரிடம் எந்தப் பணியை ஒப்படைத்தாலும், உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் – மற்றவர்களை விட வித்தியாசம் தெரிவது போல நடத்திக் காட்டுவார் அதற்கு எடுத்துக்காட்டுதான் இந்த விழா!

**கடந்த ஆண்டு அக்.5ல்**

**முப்பெரும் விழா கொண்டாடினோம்!**

தந்தை பெரியார் பிறந்தநாளை சமூகநீதி நாளாகவும், அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளை சமத்துவ நாளாகவும் அறிவித்த நமது திராவிட மாடல் அரசு, அருட்பிரகாச வள்ளலார் அவர்களின் பிறந்தநாளை தனிப்பெரும் கருணைநாளாக அறிவித்தது. வள்ளலார் பிறந்து 200 ஆண்டுகள், அவர் தொடங்கிய தரும சாலைக்கு 156 ஆண்டுகள், அவர் ஏற்றிய தீபத்துக்கு 152 ஆண்டுகள் – ஆகியவற்றை இணைத்து முப்பெரும் விழாவாக, கடந்த ஆண்டு அக்டோபர் 5ஆம் நாள் கொண்டாடினோம்.

அந்த விழாவில் கலந்து கொண்டு, ‘வள்ளலார் – 200’ விழாவுக்கான இலச்சினையை வெளியிட்டோம். அஞ்சல் உறை மற்றும் சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது. ஆண்டுதோறும், அன்னதானம் வழங்குவதற்கான நிகழ்ச்சியையும் நான் அன்றைக்கு தொடங்கி வைத்தேன். அதற்காக 3 கோடியே 25 லட்சம் ரூபாய்க்கான காசோலையும் வழங்கப்பட்டது. அது ஒருநாள் விழாவாக மட்டும் நடத்தி முடித்து விடவில்லை. ஆண்டு முழுவதும் நடைபெறும் என்று அமைச்சர் சேகர் பாபு அறிவித்தார். ஆண்டு முழுவதும் எப்படி நடத்துவார்கள் என்பதை அறிய நானும் ஆர்வமாக இருந்தேன். அந்தப் பட்டியலை வாங்கிப் பார்த்த பிறகுதான் எனக்கே மலைப்பாக இருந்தது.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் முதல், இந்த ஆண்டு அக்டோபர் மாதம் வரையிலான 52 வாரங்களும், தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் முப்பெரும் விழா

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

---

## ஜப்பானியர்கள் தொழில் தொடங்க உகந்த மாநிலமாக - வளர்ச்சி மற்றும்

# உற்பத்தித் துறையில் சிறந்து விளங்குகிறது தமிழ்நாடு!

## ‘ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா’ லிமிடெட் நிறுவனம் சார்பில் – உலகளாவிய தொழில்நுட்பம் – புத்தாக்க மையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்துவைத்து உரை!

**சென்னை, அக். 7-**

**போரூர் அருகே ஜப்பான் நாட்டின் ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க மையத்தைத் திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், ஜப்பானியர்கள் தொழில் தொடங்க உகந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது எனவும், நல்லாட்சியின் அடையாளமாக மாநில வளர்ச்சியிலும் உற்பத்தித் துறையிலும் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது எனவும் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (5.10.2023) சென்னை, போரூரில், ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஹிட்டாச்சி குழுமத்தின் துணை நிறுவனமான ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் உலகளாவிய தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மையத்தைத் திறந்து வைத்து ஆற்றிய உரை வருமாறு:-

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஹிட்டாச்சி குழுமத்தின் துணை நிறுவனமான ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் உலகளாவிய தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மைய திறப்பு விழா நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய அனைவருக்கும் என்னுடைய அன்பான காலை வணக்கத்தை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

உலகில் ‘ஃபார்ச்சூன் 500’ நிறுவனங்களில் ஒன்றாகவும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட துணை நிறுவனங்களைக் கொண்ட குழுமமாகவும், பல்வேறு தொழில் உற்பத்தி மையங்களைக் கொண்டதுமான இந்த ஹிட்டாச்சி நிறுவனம், உலகப் புகழ் பெற்ற தொழில் நிறுவனங்களில் ஒன்றாக விளங்கிக் கொண்டிருக்கிறது!

**எங்கள் ஆட்சிக்குப் பெருமை தரும்**

**‘ஹிட்டாச்சி’ நிறுவனம்!**

இந்த நிறுவனம், தனது எரிசக்தி உற்பத்தித் திட்டத்தினை கடந்த பிப்ரவரி மாதம் தமிழ்நாட்டில் துவக்கியதன் தொடர்ச்சியாகத்தான் இந்த விழா அமைந்துள்ளது.

இந்தக் குழுமம் தனது உலகளாவிய தொழில்நுட்பமற்றும்புத்தாக்கமையத்தை தமிழ்நாட்டில், குறிப்பாக சென்னையில் துவக்க இருக்கும் செய்தியானது, தமிழ்நாட்டிற்கும், எங்கள் ஆட்சிக்கும், எனக்கும் பெருமை தருவதாக அமைந்திருக்கிறது. இதற்காக, உங்கள் குழுமத்திற்கும், ஹிட்டாச்சி எனர்ஜி நிறுவனத்தின் தலைமை பொறுப்பு அதிகாரிகளுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**பொருளாதாரத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல வல்லுநர்களுடன் ஆலோசனை!**

ஏழே மாத இடைவெளியில், தமிழ்நாட்டில் நீங்கள் துவங்கி இருப்பது, தமிழ்நாட்டில் நல்லாட்சி நடைபெறுவதற்கான அடையாளம். எங்கள் ஆட்சி மீதும், எங்கள் தமிழ்நாட்டின் மீதும் நீங்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கு, என்னுடைய நன்றி! இந்த நம்பிக்கையை மேலும் வளர்க்க நாங்கள் விரும்புகிறோம். பெருமளவிலான முதலீடுகளைஈர்க்க அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறோம்.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 07-10-2023

# மகளிர் இடஒதுக்கீட்டில் சதி அரசியல்

“என் பெயரில் வீடு எதுவும் இல்லை. ஆனால் நாட்டின் லட்சக்கணக்கான மகள்களை வீட்டு உரிமையாளர் ஆக்கியுள்ளது பா.ஜ.க. அரசு” என்று தனக்குத்தானே பாமாலை சூட்டிக் கொண்டிருக்கிறார் மாண்புமிகு பிரதமர் நரேந்திரமோடி அவர்கள்.

மக்களவை, மாநில சட்டப்பேரவைகளில் மகளிருக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீட்டை பிரதமர் மோடி வழங்கி விட்டதாக நினைத்துக் கொண்டு அவருக்கு குஜராத் மாநிலத்தில் பெண்கள் சார்பில் பாராட்டு விழா நடந்துள்ளது. குஜராத் மாநிலம் வதோராவில் பா.ஜ.க. சார்பில் இந்த பாராட்டு விழா நடந்துள்ளது. இதில் பேசும்போது, பெண்கள் இடஒதுக்கீடு குறித்து தவறான பிம்பத்தைக் கட்டமைக்கிறார் பிரதமர்.

“பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்கும் மசோதா, நாடாளுமன்றத்தில் நிறைவேறாமல் இருக்க கடந்த 30 ஆண்டுகளாக பல்வேறு தந்திர வேலைகளில் எதிர்க்கட்சித் தலைவர்கள் ஈடுபட்டு வந்தனர். இப்போதும் கூட, பெண்கள் மீதான அச்சத்தால் இடஒதுக்கீடு மசோதாவுக்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். ஒரு தயக்கத்தில்தான் மசோதாவை ஆதரித்துள்ளனர். அவர்களின் அணுகுமுறை ஒருபோதும் மாறாது. மகளிர் இடஒதுக்கீடு மசோதா, நிறைவேற்றப்பட்டு விட்டதால் ஜாதி, மத ரீதியில் பெண்களைப் பிளவுபடுத்தும் முயற்சியில் எதிர்க்கட்சிகள் ஈடுபட்டுள்ளன. அவர்களின் சதி குறித்து மகளிர் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்” என்று பேசி இருக்கிறார். இவை அனைத்தும் பொய் முலாம் பூசப்பட்டவை அல்ல, மொத்தத்தில் பொய் மூட்டை ஆகும்.

அகில இந்திய மஜ்லிஸ் என்ற கட்சியைத் தவிர ஒட்டுமொத்தமாக இந்திய மக்களவையிலும் – மாநிலங்களவையிலும் இருந்த அனைத்துக் கட்சிகளும் ஆதரித்து வாக்களித்ததுதான் மகளிர் இடஒதுக்கீடு சட்டம் ஆகும். எந்த முக்கியக் கட்சியும் எதிர்த்து வாக்களிக்கவும் இல்லை. அதனைத் தடுத்து சதி செய்யவும் இல்லை. அந்த மசோதாவுக்கு எதிராகப் பேசவும் இல்லை.

**எந்தக் கட்சிகளுக்கும் அந்த மசோதாவை ஆதரிப்பதற்கான தயக்கம் இல்லை. நடுக்கம் இல்லை. தடுமாற்றம் இல்லை. எனவே பயந்துதான், அதனை ஆதரித்தார்கள் என்பதும் பொய்யாகும். ஏதாவது முக்கியக் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்தால், அதனை நிறைவேற்றாமல் கிடப்பில் போட்டு விடலாம் என்று பா.ஜ.க. தலைமை நினைத்தது. அதன் நினைப்பில் எதிர்க்கட்சிகள் சேர்ந்து மண்ணைப் போட்டு – நிறைவேற்ற வைத்து விட்டார்கள். அதுதான் முழு உண்மை.**

இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் – 33 விழுக்காடு பெண்களுக்கு கிடைத்து விடக் கூடாது என்ற சதி எண்ணத்தோடுதான் பா.ஜ.க. கொண்டு வந்துள்ளது. ‘இனி நடைபெற இருக்கும் நாடாளுமன்ற – சட்டமன்றத் தேர்தலில் பெண்களுக்கு 33 சதவிகித இடஒதுக்கீடு’ என்று இந்தச் சட்டம் சொல்லவில்லை. பிரதமர் மோடி அவர்கள், தடையே இல்லாமல் நிறைவேற்றும் வகையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வரவில்லை.

★ மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முடிந்த பிறகு

★ அதை வைத்து தொகுதி மறுவரையறைகள் முடிந்த பிறகு – என்ற இரண்டு மாபெரும் தடுப்புச் சுவர்களை எழுப்பி இருக்கிறார். இதுதான் பெண்களுக்கு எதிரான சதிச் செயல் ஆகும்.

பெண்களுக்கான உரிமையை பா.ஜ.க. எப்போதும் வழங்காது. பிரதமராக இந்திரா காந்தி அம்மையார் பொறுப்பேற்றபோது, அவர் பெண் என்பதற்காகவே கண்டித்து எழுதியது ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் அதிகாரப்பூர்வ இதழான ‘ஆர்க்கனைசர்’. இன்றும், குடியரசுத் தலைவராக இருக்கும் திரவுபதி முர்மு அவர்களை எப்படி எல்லாம் அவமானப்படுத்தி வருகிறார்கள் என்பதை அனைவரும் அறிவோம். சூத்திரர்களையும் பெண்களையும் இழிவான தன்மையில் அடையாளப்படுத்தியவர்கள் இவர்கள். அதனால், பெண்களுக்கான உரிமையை அவ்வளவு சீக்கிரம் தூக்கிக் கொடுத்து விடமாட்டார்கள் பா.ஜ.க.வின் தலைமையினர்.

**மக்கள் தொகை கணக்கெடுப்பும் – தொகுதி வரையறையும் முடிந்த பிறகு என்றால் 2029 ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் 33 விழுக்காடு இடஒதுக்கீடு பெண்களுக்குக் கிடைக்கும். 2029 ஆம் ஆண்டு – அதாவது இன்னும் 6 ஆண்டுகள் கழித்து நிறைவேறப்போகிற சட்டத்தை – இன்று நிறைவேற்றி விட்டதாக கணக்குக் காட்டி – கண்கட்டி வித்தை காட்டுகிறார் பிரதமர்.**

2029 ஆம் ஆண்டுகூட இது நிறைவேறாது என்று சொல்லி இருக்கிறார் முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம். ‘இந்தச் சட்டமே கேலியான மாயை. இது கிண்ணத்து தண்ணீரில் தெரியும் நிலவின் பிரதிபலிப்பு’ என்று அவர் சொல்லி இருக்கிறார். 2021 ஆம் ஆண்டு எடுக்கவேண்டிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பே இன்னும் எடுக்கப்படவில்லை. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு என்பது மிகப்பெரிய வேலை. அதன் முடிவுகளை வெளியிடவே இரண்டு ஆண்டுகள் ஆகும். இன்னும் மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்கான தேதியையே இவர்கள் வெளியிடவில்லை. தொகுதி வரையறையை 2026 வரைக்கும் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இதற்கு முன்பு நடந்த தொகுதி வரையறையே 6 ஆண்டுகள் ( 2002-2008) நடந்தது. எனவே, இந்தச்சட்டத்தை 2029 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்த இயலாது – என்று மிகத் தெளிவாக, மோடி ஆட்சியின் மகளிர் இடஒதுக்கீடு சட்டத்தின் முகத்திரையைக் கிழித்திருக்கிறார் ப.சிதம்பரம்.

**1996 ஆம் ஆண்டு – 2010 ஆம் ஆண்டு – கொண்டு வரப்பட்ட சட்டங்களில் இதுபோன்ற தடைச்சுவர்கள் இல்லை. என்றால் இப்போது இத்தடைகளை உருவாக்கியது யார்? எதிர்க்கட்சிகள் அல்ல. இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தவர்கள்தான் இந்த தடைச்சுவரையும் எழுப்பியவர்கள்.**

**எந்தத் தடையும் இல்லாமல் பா.ஜ.க. இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருந்து – எதிர்க்கட்சிகள் இந்த நிபந்தனையைச் சேர்க்கச் சொல்லி இருந்தால் – பிரதமர் குற்றம் சாட்டலாம். அப்படி எதுவும் நடக்கவில்லை. எனவே பெண்களுக்கு உரிமை கிடைக்கக் கூடாது என்பதே பிரதமர் மோடியின் சதித் திட்டம் ஆகும்.**

அதிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்புப் பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்க மறுப்பது என்பதும், பா.ஜ.க.வின் உயர்வகுப்பு எண்ணத்தின் வெளிப்பாடுதான். அரசியல் அதிகாரத்தை மேல்மட்டத்திலேயே வைத்துக் கொள்ள நினைக்கும் சதிச் செயல்தான் என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.10.2023) இந்து சமய அறநிலையத் துறை சார்பில் சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற “வள்ளலார் – 200” ஓராண்டு தொடர் அறநிகழ்வின் நிறைவு விழாவில், வள்ளலாரின் வாழ்க்கை வரலாறு மற்றும் தமிழ்நாடு முழுவதும் 52 வாரங்கள் நடத்தப்பட்ட வள்ளலார் முப்பெரும் விழா நிகழ்ச்சிகளை தொகுத்து அமைக்கப்பட்ட சிறப்பு புகைப்படக் கண்காட்சியினை திறந்து வைத்தார். இவ்விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், திருவாவடுதுறை ஆதீனம் சீர்வளர்சீர் அம்பலவாண தேசிகர் பரமாச்சாரிய சுவாமிகள், குன்றக்குடி ஆதீனம் சீர்வளர்சீர் பொன்னம்பல அடிகளார், பேரூர் ஆதீனம் சீர்வளர்சீர் மருதாச்சல அடிகளார். சிரவை ஆதினம் சீர்வளர்சீர் குமரகுருபர சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம் சீர்வளர்சீர் சிவஞானபாலய தேசிகர், வேளாக்குறிச்சி ஆதீனம்சீர்வளர்சீர் சத்திய ஞான மகாதேவ தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், சூரியனார் கோயில் ஆதீனம் சீர்வளர்சீர் மகாலிங்க தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், வள்ளலார் முப்பெரும் விழா சிறப்புக் குழுத் தலைவர் முனைவர் பி.கே. கிருட்டிணராஜ் வானவராயர் மற்றும் உறுப்பினர்கள், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளிதரன், கூடுதல் ஆணையர் அ.சங்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 2,500க்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பு! ஜப்பான் நாட்டு ஹிட்டாச்சி குழுமத்தின்

# உலகளாவிய தொழில்நுட்ப - புத்தாக்க மையம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து பணி நியமன ஆணைகளை வழங்கினார்!

சென்னை, அக். 7-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.10.2023) சென்னை, போரூரில் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஹிட்டாச்சி குழுமத்தின் துணை நிறுவனமான ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட் நிறுவனத்தால், எரிசக்தித் துறையில் தனித் திறன் வாய்ந்த 2500க்கும் மேற்பட்ட நபர்களுக்கு உயர்தர வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள உலகளாவிய தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மையத்தை (Global Technology & Innovation Centre) திறந்து வைத்தார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.10.2023) சென்னை, போரூரில் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஹிட்டாச்சி குழுமத்தின் துணை நிறுவனமான ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட் நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ள உலகளாவிய தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மையத்தை (Global Technology & Innovation Centre) திறந்து வைத்து, ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட 6 மாணவ, மாணவியர்களுக்கு அந்நிறுவனத்தில் உயர் தொழில்நுட்ப வேலைவாய்ப்புக்கான பயிற்சி (Internship) பெறுவதற்கு அனுமதி கடிதங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, சட்டமன்ற உறுப்பினர் கே. கணபதி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண்ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் வே.விஷ்ணு, ஹிட்டாச்சி எனர்ஜி நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் கிளாடியோ ஃபாச்சின், ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் என்.வேணு, தலைமை தொழில்நுட்ப அலுவலர் உர்ஸ் டோக்வில்லர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பொருளாதார குறியீட்டில் தமிழ்நாடு முன்னணி மாநிலம்!

தமிழ்நாடு பல பொருளாதார குறியீடுகளில் அகில இந்திய அளவில் முன்னணி மாநிலமாக விளங்கி வருகிறது. இந்நிலையை தக்க வைத்துக் கொள்ளவும், பெரும் அளவிலான முதலீடுகளை ஈர்ப்பதன் மூலம் தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கி அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதுடன், மாநிலத்தில் பரவலான வளர்ச்சியை உறுதி செய்திடவும் தமிழ்நாடு அரசின் தொழில் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

வணிக நடைமுறைச் சட்டம் / விதிகளில் பெருமளவிலான சீர்திருத்தங்களை மேற்கொண்டு, அனுமதிகள் பெறுவதை இலகுவாக்கியதன் விளைவாக, தொழில் செய்வதற்கு உகந்த மாநிலங்களின் தரவரிசையில், 14ஆம் இடத்திலிருந்த தமிழ்நாடு, வெகுவாக முன்னேறி தற்போது 3ஆம் இடத்தை பெற்றுள்ளது. குறிப்பிட்ட ஒரு சில துறைகளை மட்டும் சார்ந்து இல்லாமல், பல்வேறு துறைகள் குறிப்பாக வளர்ந்துவரும் துறைகளான மின் வாகனங்கள், மின்கலன்கள், பசுமை எரிசக்தி, வான்வெளி மற்றும் பாதுகாப்பு போன்றவற்றில் அதிக முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு அரசு அதிக கவனம் செலுத்தி வருகிறது. முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதை ஊக்குவிப்பதற்கு, துறைவாரியாக கொள்கைகளை வெளியிட்டுள்ள தமிழ்நாடு அரசு, உலகத் தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகள் கொண்ட தொழில்பூங்காக்களையும் (Sector Specific Policies) அமைத்து வருகிறது.

### ஒரு டிரில்லியன் அளவிற்கு பொருளாதார வளர்ச்சிக்கு நடவடிக்கை!

2030ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி அடைந்திட வேண்டும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நிர்ணயித்துள்ள இலக்கினை எய்துவதற்காக, உள்நாட்டில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் முதலீட்டாளர் மாநாடுகளை நடத்தியதன் விளைவாக, இவ்வரசு பொறுப்பேற்றது முதல் இதுநாள் வரை, 4,15,282 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ரூ.2,97,196 கோடி மதிப்பிலான 241 முதலீடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

முதலீடுகளை ஈர்ப்பதற்கான முயற்சிகளின் அடுத்த கட்டமாக, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினை 2024ஆம் ஆண்டு ஜனவரி 7 மற்றும் 8 ஆகிய தேதிகளில், சென்னையில் சிறப்பான முறையில் நடத்தி, பெருமளவிலான முதலீடுகளை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசின் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை மேற்கொண்டு வருகின்றது.

### ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட்

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஹிட்டாச்சி குழுமம், உலகெங்கிலும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட துணை நிறுவனங்களைக் கொண்ட உலகளாவிய ஃபர்ச்சூன் (Global Fortune) 500 நிறுவனங்களில் ஒன்றாக இருந்து வருகிறது. அதன் துணை நிறுவனங்களில் ஒன்றான ஹிட்டாச்சி எனர்ஜி நிறுவனம், சுவிட்சர்லாந்தினை தனது தலைமையிடமாகக் கொண்டுள்ளது. இதன் துணை நிறுவனமான ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட் முன்னதாக பிப்ரவரி 2023ல், தனது எரிசக்தி திட்டத்தினை சென்னையில் தொடங்கியுள்ளது.

தற்போது, இந்நிறுவனம், சென்னை, போரூரில் ஒரு உலகளாவிய தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மையத்தை அமைத்துள்ளது. 3 லட்சம் சதுர அடி பரப்பளவு கொண்ட இந்த தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மையத்தில், சுமார் 50,000 சதுர அடியில் ஒரு பிரத்யேக ஆய்வகமும் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் எரிசக்தித் துறையில் முனைவர் பட்டம் மற்றும் முதுகலை பட்டம் பெற்ற 2500 தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு உயர்தர வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் இந்த உலகளாவிய தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மையத்தை இன்று திறந்து வைத்தார். மேலும், முதலமைச்சர் அவர்களின் கனவுத் திட்டமான ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட 6 மாணவ, மாணவியர்களுக்கு அந்நிறுவனத்தில் உயர் தொழில்நுட்ப வேலைவாய்ப்புக்கான பயிற்சி (Internship) பெறுவதற்கு அனுமதி கடிதங்களையும் வழங்கினார்.

### தமிழ்நாட்டில் 30க்கும் மேற்பட்ட உலகளாவிய திறன் மையங்கள்!

கடந்த இரண்டு ஆண்டுகளில், 30க்கும் மேற்பட்ட உலகளாவிய திறன் மையங்கள் (Global Capability Centres GCCs) தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ளன. உலகளவில் தமிழ்நாட்டின் போட்டித்தன்மையை வெகுவாக அதிகரிக்க இவை பெரிதும் உதவும்.

இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, சட்டமன்ற உறுப்பினர் கே.கணபதி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண்ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் வே.விஷ்ணு, ஹிட்டாச்சி எனர்ஜி நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் கிளாடியோ ஃபாச்சின், ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் என்.வேணு, தலைமை தொழில்நுட்ப அலுவலர் உர்ஸ் டோக்வில்லர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.10.2023) இந்து சமய அறநிலையத் துறை சார்பில் சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற “வள்ளலார் – 200” ஓராண்டு தொடர் அறநிகழ்வின் நிறைவு விழாவில், வள்ளலாரின் வாழ்க்கை வரலாறு மற்றும் தமிழ்நாடு முழுவதும் 52 வாரங்கள் நடத்தப்பட்ட வள்ளலார் முப்பெரும் விழா நிகழ்ச்சிகளை தொகுத்து அமைக்கப்பட்ட சிறப்பு புகைப்படக் கண்காட்சியினை திறந்து வைத்து, அங்கு வைக்கப்பட்டுள்ள வள்ளலார் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இவ்விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், திருவாவடுதுறை ஆதீனம் சீர்வளர்சீர் அம்பலவாண தேசிகர் பரமாச்சாரிய சுவாமிகள், குன்றக்குடி ஆதீனம் சீர்வளர்சீர் பொன்னம்பல அடிகளார், பேரூர் ஆதீனம் சீர்வளர்சீர் மருதாச்சல அடிகளார், சிரவை ஆதினம் சீர்வளர்சீர் குமரகுருபர சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம் சீர்வளர்சீர் சிவஞானபாலய தேசிகர், வேளாக்குறிச்சி ஆதீனம் சீர்வளர்சீர் சத்திய ஞான மகாதேவ தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், சூரியனார் கோயில் ஆதீனம் சீர்வளர்சீர் மகாலிங்க தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், வள்ளலார் முப்பெரும் விழா சிறப்புக் குழுத் தலைவர் முனைவர் பி.கே. கிருட்டிணராஜ் வானவராயர் மற்றும் உறுப்பினர்கள், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர் அ.சங்கர், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.10.2023) இந்து சமய அறநிலையத் துறை சார்பில் சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற “வள்ளலார் – 200” ஓராண்டு தொடர் அறநிகழ்வின் நிறைவு விழாவில், “வள்ளலாரின் இறை அனுபவங்கள்” என்ற நூலினை வெளியிட்டார். இவ்விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், திருவாவடுதுறை ஆதீனம் சீர்வளர்சீர் அம்பலவாண தேசிகர் பரமாச்சாரிய சுவாமிகள், குன்றக்குடி ஆதீனம் சீர்வளர்சீர் பொன்னம்பல அடிகளார், பேரூர் ஆதீனம் சீர்வளர்சீர் மருதாச்சல அடிகளார். சிரவை ஆதினம் சீர்வளர்சீர் குமரகுருபர சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம் சீர்வளர்சீர் சிவஞானபாலய தேசிகர். வேளாக்குறிச்சி ஆதீனம்சீர்வளர்சீர் சத்திய ஞான மகாதேவ தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், சூரியனார் கோயில் ஆதீனம் சீர்வளர்சீர் மகாலிங்க தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், வள்ளலார் முப்பெரும் விழா சிறப்புக் குழுத் தலைவர் முனைவர் பி.கே.கிருட்டிணராஜ் வானவராயர் மற்றும் உறுப்பினர்கள், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர் அ.சங்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கடலூர் புதிய பேருந்து நிலையத்திற்கு அருட்பிரகாச வள்ளலார் பெயர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

நடத்த முடிவு செய்யப்பட்டது. இதற்காக முனைவர் பி.கே.கிருட்டிணராஜ் வானவராயர் தலைமையில் 14 உறுப்பினர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டது. இவர்களது ஆலோசனைப்படி 52 வாரங்களும் நிகழ்ச்சிகள் நடந்து முடிந்திருக்கிறது.

சென்னையில், நான் கலந்து கொண்டது முதல் நிகழ்ச்சி. இதன் தொடர்ச்சியாக 50 வாரங்களாக 50 நகரங்களில் வள்ளலார் முப்பெரும் விழா நடைபெற்றுள்ளது. இப்போது இங்கு நான் கலந்து கொள்ளும் இந்த நிறைவு விழா, 52ஆவது நிகழ்ச்சி!

**நிறைவு விழா மட்டுமல்ல;**
**நிறைவான விழா!**

என்னைப் பொறுத்தவரையில் இது நிறைவு விழா மட்டுமல்ல; நிறைவான விழா!

வள்ளல் பெருமானாருக்கு நாம் ஆற்றவேண்டிய கடமையை – மரியாதையை நிறைவாக ஆற்றி இருக்கிறோம். தொடர் அன்னதானங்கள் 21 மண்டலங்களில் நடைபெற்றுள்ளன.

பசிப்பிணி போக்க அணையா அடுப்பை உருவாக்கிய அண்ணல் பெயரால் அரசின் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டுள்ளது. பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியருக்கு வள்ளலார் வாழ்க்கை தொடர்பாக கட்டுரை, பேச்சு மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தி, அதில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது.

அறிவுப் பசியையும் – வயிற்றுப் பசியையும் போக்கும் விழாக்களாக இவை அமைந்துள்ளன. இதனை ஆர்வத்துடன் செய்து காட்டியுள்ள அமைச்சர் சேகர் பாபு அவர்களையும், இந்து சமய அறநிலையத் துறை முதன்மைச் செயலாளர் மணிவாசன் அவர்களையும், சிறப்புப் பணி அலுவலர் குமரகுருபரன் அவர்களையும், ஆணையர் முரளீதரன் அவர்களையும், கூடுதல் ஆணையர் சங்கர் அவர்கள் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களையும் நான் பாராட்டுகிறேன். உங்கள் அனைவரின் சார்பில் அவர்களுக்கெல்லாம் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று இந்தக் காலக்கட்டத்துக்குத் தேவையான மிகமுக்கியமான வழிகாட்டி தான் அருட்திரு வள்ளலார் அவர்கள். இறையியல் என்பது அவரவர் விருப்பம்! அவரவர் தனிப்பட்ட உரிமை! ஆனால் அந்த இறையியலை – ஆன்மீக உணர்வை ஒரு கூட்டம் அரசியலுக்கு பயன்படுத்தி, அதன் மூலமாக குளிர் காயப் பார்க்கிறது.

அரசியல் வேறு – ஆன்மீகம் வேறு என்பதை பகுத்தறிந்து பார்க்கும் பகுத்தறிவாளர்கள்தான் தமிழ்நாட்டு மக்கள். அந்த மக்களைக் குழப்ப சிலர் முயற்சித்து வரும் காலத்தில், வள்ளலார் அவர்கள் நமக்கு அறிவுத் திறவு கோலாகக் காட்சி அளிக்கிறார்கள்.

**‘கண்மூடி வழக்கமெல்லாம்**
**மண்மூடிப் போக’ எனப் பாடியவர்!**

சாதியும் மதமும் சமயமும் பொய் யென ஆதியில் உணர்த்தியவர் அருட்பெருஞ்சோதி இராமலிங்க வள்ளலார் அவர்கள், கண்மூடி வழக்கம் எல்லாம் மண்மூடிப் போக எனப் பாடியவர் அவர்.

“சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர் அலைந்து அலைந்து வீணே நீர் அழிதல் அழகலவே” – என்று பாடியவர் வள்ளலார் பெருமான் அவர்கள்.

அனைத்துயிரும் ஒன்று என்ற வள்ளல் பெருமானாரின் எண்ணத்தை இன்று நாம் விதைக்க வேண்டும். சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் 419ஆவது வாக்குறுதியாக ‘வடலூரில் வள்ளலார் சர்வதேச மையம்’ அமைக்கப்படும் என்று சொல்லி இருந்தோம்.

‘‘சாதி சமய நல்லிணக்கத்தைப் பேணும் வகையில் அருட்பிரகாச வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கப் போதனைகளைப் போற்றும் வகையில், இது அமையும்’’ என்று சொல்லப்பட்டது. அந்த மையத்தின் ஆணையினை இன்று உங்கள் முன்னால் வழங்கியிருக்கிறோம். விரைவாக அந்தப் பணிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டு மிகச் சிறப்பாக அது கட்டிமுடிக்கப்படும்.

சென்னையில் முதன்முதலாக வள்ளலார் நகரை உருவாக்கியவர் முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள். நாம் ஆட்சிக்கு வந்ததும் வள்ளலார் பிறந்தநாளை தனிப்பெரும் கருணை நாளாக அறிவித்துக் கொண்டாடி வருகிறோம்.

**வள்ளலாரை உயர்த்துவது**
**சிலருக்குப் பிடிக்கவில்லை!**

வள்ளலாரின் அறிவு ஒளியில் இதுபோன்ற பிளவுசக்திகள் மங்கிப் போவார்கள். நாம் வள்ளலாரை உயர்த்திப் பிடிப்பது, சிலருக்கு பிடிக்கவில்லை. பெரியாரையும் போற்றுகிறோம், வள்ளலாரையும் கொண்டாடுகிறார்களே! என்பதுதான் அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. திராவிட மாடல் அரசு என்று சொல்லிக் கொள்கிறார்கள். கோவில்கள் அனைத்தையும் பொன்போல போற்றிப் பாதுகாக்கிறார்களே – இவர்களை என்ன சொல்லி குற்றம் சாட்டுவது என்று சிலருக்கு குழப்பமாக இருக்கிறது.

இரண்டு நாட்களுக்கு முன்பு, தெலங்கானா மாநிலத்தில் தேர்தல் பரப்புரை செய்ய வருகை வந்த பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் – தமிழ்நாட்டுக் கோவில்களைப் பற்றிப் பேசி இருக்கிறார்கள். அவர் மத்தியப் பிரதேசத்திற்கு சென்று பேசினாலும் – அந்தமானில் பேசினாலும் – தெலங்கானாவில் பேசினாலும் – தமிழ்நாட்டைப் பற்றித் தான் பேசுகிறார். அவரால் மறக்க முடியாத மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது.

**பிரதமர் குற்றச்சாட்டுக்கு**
**திட்டவட்டமாக மறுப்பு – கண்டனம்!**

“தமிழ்நாட்டில் உள்ள இந்து கோவில்களை, திமுக அரசு கைப்பற்றி ஆக்கிரமித்துள்ளது. கோவில் சொத்துகள் மற்றும் வருமானங்கள் முறைகேடாக பயன்படுத்தப்படுகிறது” என்று பகிரங்கமாக அவர் பேசி இருக்கிறார். இந்தக் குற்றச்சாட்டை நான் திட்டவட்டமாக மறுக்கிறேன்.

பிரதமர் அவர்களுக்கு நான் எனது வன்மையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன். இதனை ஒரு தமிழ் நாளிதழ் தலைப்புச் செய்தியாக வெளியிட்டுள்ளது. அந்த நாளிதழின் நிர்வாகி ஒருவர், புகழ்பெற்ற திருக்கோவில் ஒன்றில் அறங்காவலர்களில் ஒருவராக இருக்கிறார். அப்படியானால் அவர், அந்த கோவிலை ஆக்கிரமித்துள்ளார் என்று அர்த்தமா? அதே நாளிதழில் கடந்த ஜூன் மாதத்தில் அறநிலையத் துறையின் சிறப்பான செயல்பாடு பற்றி ஒரு கட்டுரையும் வந்திருக்கிறது.

**நாளிதழ் வெளியீட்டாளரின்**
**நற்சான்றுப் பத்திரம்!**

அந்த கட்டுரையை நான் படிக்கிறேன். அந்தக் கட்டுரைக்கு வைக்கப்பட்டிருக்கக்கூடிய தலைப்பு: “கோவில் உண்டியல் பணம் எங்கும் போகாது’’! யூகப் பேச்சுக்களும், உண்மை நிலையும் அதில் அடங்கும். கோவில்களில் உண்டியல் வைக்கப்பட்ட காலம் முதல் இன்று வரை பக்தர்களின் காணிக்கைகள் பத்திரமாகத்தான் இருக்கின்றன. மிகுந்த முன்னெச்சரிக்கையுடனே கையாளப்படுகின்றன. காணிக்கை குறித்த பதிவேடுகள் எண்ணி முடிக்கப்பட்ட மறுநாளே அறநிலையத் துறை அலுவலகத்துக்கு கொண்டு செல்லப்பட்டு – அங்குள்ள பதிவேடுகளில் ஏற்றப்படுகின்றன. அதிலிருந்து ஒரு நகல் தணிக்கைப் பிரிவுக்கும் அனுப்பப்படுகிறது. தனியார் நிறுவனங்களில் இல்லாத அளவுக்குக் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் கடைப்பிடிக்கப்படுகின்றன” இப்படிச் சொல்வது இந்த ஸ்டாலின் அல்ல, அந்த நாளிதழின் வெளியீட்டாளரே சொல்லி இருக்கிறார்.

இன்னொன்றையும் சொல்கிறார் அவர்... எந்த நாளிதழ் என்று பெயர் சொல்ல விரும்பவில்லை. உங்களுக்கே புரியும். அதில் என்ன சொல்கிறார் என்றால், “ஒரு சிலர் அவரவர் கற்பனைச் சிந்தனைக்கு ஏற்றாற்போல உண்டியல் காணிக்கைகள் இந்த அமைச்சருக்கு பத்து சதவிகிதம் போகிறது – அந்த அமைச்சருக்கு 10 சதவிகிதம் போகிறது எனச் சொல்வது – அவர்களின் அறியாமையன்றி வேறில்லை” என்று சொல்வதும் இந்த ஸ்டாலின் அல்ல, அந்த நாளிதழின் வெளியீட்டாளரே சொல்லி இருக்கிறார்.

அதே நாளேட்டில்தான் பிரதமர் சொன்ன பொய்யை தலைப்புச் செய்தியாக போட்டிருக்கிறார்கள்.

பொறுப்பு வாய்ந்த இந்திய நாட்டின் பிரதமர் அவர்கள் – தவறான அவதூறு செய்தியை சொல்வது சரியா? ஒரு மாநிலத்தின் செயல்பாடு குறித்து – இன்னொரு மாநிலத்தில் போய் – பேசுவது முறையா? தர்மமா? திமுக ஆட்சிக்கு வந்தது முதல் கோவில்களை அரசு ஆக்கிரமித்தது போலவும் – வருமானங்கள் முறைகேடாக பயன்படுத்தப்படுவது போலவும் பொய்யான செய்தியை இந்திய நாட்டின் பிரதமர் கட்டமைக்க வேண்டிய அவசியம் என்ன? அவர் யாருக்காக பேசுகிறார்? யாருடைய குரலை எதிரொலிக்கிறார்? இந்த இரண்டு ஆண்டு காலத்தில் 3,500 கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்பிலான கோவில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளது. இது தவறா? சொல்லுங்கள் இது தவறா? 1000 கோவில்களுக்கு குடமுழுக்கு விழா நடத்தி இருக்கிறோம். இது தவறா?

1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான, வரலாற்றுச் சிறப்புமிக்க 112 திருக்கோயில்களை பழமை மாறாமல் சீர்செய்வதற்கும் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தவறா?

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள 1250 திருக்கோயில்கள் மற்றும் 1250 கிராமப் புறத் திருக்கோயில்களின் திருப்பணி களையும் சேர்த்து இந்த நிதியாண்டில் மட்டும் 5078 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இது தவறா?

எதைத் தவறு என்கிறார் பிரதமர்? பிரதமர் அவர்களின் பார்வையில்தான் தவறு இருக்கிறது. எங்களைப் பொறுத்தவரையும் – ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற பொதுத் தன்மையுடனான ஆட்சியை நடத்தி வருகிறோம். கருணையுள்ள ஆட்சியை நடத்தி வருகிறோம். அதனால்தான் கருணை வடிவிலான வள்ளலாரைப் போற்றுகிறோம்.

அதற்கு அடையாளமாக வள்ளலார் – 200 நிகழ்ச்சியில் ஓர் அறிவிப்பை நான் வெளியிட விரும்புகிறேன்.

**வாடிய உயிர்களை**
**வாழ வைக்கும் ஆட்சி!**

**கடலூர் மாவட்டத் தலைநகரில் 17 ஏக்கரில் அமைக்கப்பட இருக்கின்ற புதிய பேருந்து நிலையத்திற்கு “அருட்பிரகாச வள்ளலார்” அவர்களின் பெயர் சூட்டப்படும் என்பதை மகிழ்ச்சியோடும் பெருமையோடும் இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.**

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற வள்ளலார் வழியில், வாடிய உயிர்கள் அனைத்தையும் வாழ வைக்கும் ஆட்சியாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்றைக்கும் செயல்படும்! இது உறுதி!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## பிரதமர் பேசுவது முறையா? தர்மமா?

பொறுப்பு வாய்ந்த இந்திய நாட்டின் பிரதமர் அவர்கள் – தவறான அவதூறு செய்தியை சொல்வது சரியா? ஒரு மாநிலத்தின் செயல்பாடு குறித்து – இன்னொரு மாநிலத்தில் போய் – பேசுவது முறையா? தர்மமா? திமுக ஆட்சிக்கு வந்தது முதல் கோவில்களை அரசு ஆக்கிரமித்தது போலவும் – வருமானங்கள் முறைகேடாக பயன்படுத்தப்படுவது போலவும் பொய்யான செய்தியை இந்திய நாட்டின் பிரதமர் கட்டமைக்க வேண்டிய அவசியம் என்ன? அவர் யாருக்காக பேசுகிறார்? யாருடைய குரலை எதிரொலிக்கிறார்? இந்த இரண்டு ஆண்டு காலத்தில் 3,500 கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்பிலான கோவில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளது. இது தவறா? சொல்லுங்கள் இது தவறா? 1000 கோவில்களுக்கு குடமுழுக்கு விழா நடத்தி இருக்கிறோம். இது தவறா?

1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான, வரலாற்றுச் சிறப்புமிக்க 112 திருக்கோயில்களை பழமை மாறாமல் சீர்செய்வதற்கும் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தவறா?

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள 1250 திருக்கோயில்கள் மற்றும் 1250 கிராமப்புறத் திருக்கோயில்களின் திருப்பணி களையும் சேர்த்து இந்த நிதியாண்டில் மட்டும் 5078 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இது தவறா?

எதைத் தவறு என்கிறார் பிரதமர்? பிரதமர் அவர்களின் பார்வையில்தான் தவறு இருக்கிறது. எங்களைப் பொறுத்தவரையும் – ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற பொதுத் தன்மையுடனான ஆட்சியை நடத்தி வருகிறோம். கருணையுள்ள ஆட்சியை நடத்தி வருகிறோம். அதனால்தான் கருணை வடிவிலான வள்ளலாரைப் போற்றுகிறோம்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.10.2023) சென்னை, போரூரில் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஹிட்டாச்சி குழுமத்தின் துணை நிறுவனமான ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட் நிறுவனத்தால், எரிசக்தித் துறையில் தனித்திறன் வாய்ந்த 2500–க்கும் மேற்பட்ட நபர்களுக்கு உயர்தர வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள உலகளாவிய தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மையத்தை (Global Technology & Innovation Centre) திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, சட்டமன்ற உறுப்பினர் கே.கணபதி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண்ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் வே.விஷ்ணு, ஹிட்டாச்சி எனர்ஜி நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் கிளாடியோ ஃபாச்சின், ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் என். வேணு, தலைமை தொழில்நுட்ப அலுவலர் உர்ஸ் டோக்வில்லர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தொழில் துறையில் அதிக முதலீடுகளை ஈர்க்க நடவடிக்கை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை- முதல் பக்கத் தொடர்ச்சி

தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலை வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம், மாநிலத்தின் பொருளாதாரத்தைத் தொடர்ந்து வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்ல பொருளாதார வல்லுநர்களுடன் கலந்தாலோசனைகள் மேற்கொண்டு, எங்களது அரசு பல்வேறு முயற்சிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

முதலீடுகளை ஈர்க்கும் வகையில், உலகத் தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகளுடன் துறை சார்ந்த தொழில் பூங்காக்களை அமைத்து வருகிறோம். வளர்ந்து வரும் துறைகளில் முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில் துறை சார்ந்த கொள்கை அறிக்கைகளை வெளியிட்டு வருகிறோம்.

அந்த வகையில் மாநிலத்தில்,

❖ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள்,

❖ புத்தாக்கத் திட்டங்கள்,

❖ திறன் மேம்பாட்டு மையங்கள் ஆகிய திட்டங்களை பெருமளவில் ஈர்ப்பதற்காகத் திட்டங்கள் தீட்டினோம்.

### தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை!

இவ்வாறான செயல்பாடுகள் மூலம், இந்தத் துறையில் பெருமளவு முதலீடுகளை ஈர்ப்பதற்கான எங்கள் தரப்பு முயற்சியே இது. உலக அளவில் ஏற்பட்டு வரும் தொழில்நுட்பத்தின் அதிவேக வளர்ச்சிக்கு ஏற்ப, நமது தொழில் துறையும், மாற்றங்களை மேற்கொண்டு அதே வேகத்தில் பயணம் மேற்கொள்வது இன்றியமையாத ஒன்று. இதற்கான முயற்சிகளை ஊக்கப்படுத்தி, இந்தத் துறையில் முதலீடுகளை ஈர்க்கும் நோக்கத்தில்தான், “தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை 2022” கடந்த ஆண்டு ஜூலை மாதம் என்னால் வெளியிடப்பட்டது.

### உலகளாவிய திறன் மையங்கள் அதிகரித்துள்ளன!

இந்தக் கொள்கை வெளியிட்ட பிறகு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, புத்தாக்கம், புத்தொழில்கள் மற்றும் உலகளாவிய திறன் மேம்பாட்டு மையங்கள் போன்ற துறைகளில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. தொழில்துறை, கல்வியாளர்கள், புத்தாக்கம் மேற்கொள்வோர் மற்றும் புத்தொழில் நிறுவனங்களுக்கு இது மிகப்பெரும் வாய்ப்புகளை வழங்குகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு தொடர்பான உலகளாவிய திறன் மையங்கள் (குளோபல் கேப்பபிலிட்டி சென்டர்ஸ்) அதிகரித்துள்ளது.

### 1 டிரில்லியன் பொருளாதார மாநிலம் எனும் நமது இலக்கு!

கடந்த இரண்டு ஆண்டுகளாக, முப்பதுக்கும் மேற்பட்ட GCCக்கள், தமது புதிய நிறுவனங்களையோ அல்லதுவிரிவாக்கத்திட்டங்களையோ நிறுவியுள்ளன. உற்பத்தித் துறையில், உலக அளவில் சிறந்து விளங்கும் தமிழ்நாடு, இவ்வாறான GCC மற்றும் ஆராய்ச்சி & மேம்பாடு ஆகிய துறைகளில், நல்ல வளர்ச்சி பெற்று வருவது மாநிலத்திற்குப் பெருமை அளிக்கக்கூடிய ஒன்று. மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மிகப்பெரிய பயனை ஏற்படுத்தும். இந்த வேகத்தில் தமிழ்நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி அடைவதைக் காணும் போது, “2030ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் பொருளாதார மாநிலம்” என்ற எங்கள் இலக்கினை அடையும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்ற நம்பிக்கை எங்களுக்கு வளர்ந்து கொண்டே போகிறது.

தமிழ்நாடு மாநில திட்டக்குழுவின் வழிகாட்டுதலுடன், மாநிலப் பொருளாதார மற்றும் புள்ளியியல் துறை சார்பில் சில ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. யஅப்போது கிடைத்த புள்ளிவிவரங்களை வைத்து, ஊடகங்கள் சிறப்புக் கட்டுரைகளை எழுதி இருந்தன.

தமிழ்நாடு வெகு விரைவில் 1 டிரில்லியன் பொருளாதாரத்தை அடைந்திடும் என்று ஊடகங்கள் கூறியுள்ளது எங்களுக்கு நம்பிக்கை அளிப்பதாக உள்ளது. நான் அரசுமுறைப் பயணமாக ஜப்பான் நாட்டிற்குச் சென்ற போது, எனக்குக் கிடைத்திட்ட வரவேற்பும் உற்சாகமும், நான் தமிழ்நாட்டில்தான் இருக்கிறேனோ என்று ஒரு நிமிடம் என்னை யோசிக்க வைத்தது. தமிழ்நாட்டிற்கும், ஜப்பானுக்குமான தொடர்புகள் மிக மிக அதிகம். தமிழ்நாட்டில், அதிக அளவில் ஜப்பானியர்கள் வசித்து வருகிறார்கள்.

**ஏழே மாத இடைவெளியில், தமிழ்நாட்டில் நீங்கள் துவங்கி இருப்பது, தமிழ்நாட்டில் நல்லாட்சி நடைபெறுவதற்கான அடையாளம். எங்கள் ஆட்சி மீதும், எங்கள் தமிழ்நாட்டின் மீதும் நீங்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கு, என்னுடைய நன்றி! இந்த நம்பிக்கையை மேலும் வளர்க்க நாங்கள் விரும்புகிறோம். பெருமளவிலான முதலீடுகளை ஈர்க்க அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறோம்.**

இந்தியாவுக்குள், தமிழ்நாடு எப்போதுமே, ஜப்பானிய முதலீடுகளுக்கு உகந்த முன்னணி மாநிலமாக விளங்குகிறது. ஹிட்டாச்சி உட்பட, எண்ணற்ற ஜப்பான் நிறுவனங்கள் தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்து, தங்கள் திட்டங்களை இங்கு நிறுவியுள்ளார்கள்.

### அதிநவீன தொழில்நுட்பம் அறிமுகம்! ஹிட்டாச்சிக்கு பாராட்டு!

ஜப்பான் இந்தியா முதலீடு மேம்பாட்டுக் கூட்டாண்மைத் திட்டத்தின் கீழ், இந்தியாவில் நிறுவப்பட்டுள்ள 12 தொழில் நகரியங்களில், 3 நகரியங்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன. அந்த வரிசையில், ஹிட்டாச்சி நிறுவனம் தனது தொழிற்சாலைகளை தமிழ்நாட்டில் நிறுவி வருவதோடு மட்டுமின்றி, அவற்றைப் பெருமளவில் விரிவாக்கம் மேற்கொண்டு வருவதும் மகிழ்ச்சி தருகிறது. சென்னையில் வரவிருக்கும் இதுபோன்ற உலகத் தரம் வாய்ந்த புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்ப மையங்கள், நமது உள்ளூர் திறன்களுக்கு உலக அளவில் எவ்வளவு வாய்ப்புகள் உள்ளன என்பதற்கான எடுத்துக்காட்டு. இந்த அதிநவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியதற்காக ஹிட்டாச்சி எரிசக்தி நிறுவனத்திற்கு என் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் புத்தாக்க மற்றும் தொழில்நுட்ப மையம் அவர்களின் உள்ளடக்கிய வளர்ச்சிப் பயணத்திற்கு உறுதுணையாக நின்று, அவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கு வழிவகுத்திட வேண்டும். அதன் மூலம், உங்களின் எதிர்காலத் திட்டங்களை, தமிழ்நாட்டில் மேலும், மேலும் நிறுவிட வேண்டும் என்றும் நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

3 லட்சம் சதுர அடியில் அமைய உள்ள இந்த புத்தாக்க மற்றும் தொழில்நுட்ப மையத்தில், 50,000 சதுர அடியில், சிறப்பு ஆய்வகமும் அமைத்துள்ளது. எரிசக்தித் துறையில், நிபுணத்துவம் பெற்ற மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்ட உயர்தர வேலைவாய்ப்புகளை இந்தத் திட்டம் வழங்க உள்ளது.

### தொழில் முனைவோர்க்கு மேம்பட்ட தொழில் நுட்பங்களில் பயிற்சி!

இந்தத் திட்டத்தின் மூலமாக 2500 பேர்களுக்கு உயர் வேலைவாய்ப்பு கிடைக்கும். தமிழ்நாட்டில் உள்ள இளைஞர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் இளம் தொழில் முனைவோருக்கு, அதிநவீன மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களில் பயிற்சி அளித்திட நாங்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

மேம்பட்ட உற்பத்தி முறைக்கான திறன்மிகு மையங்கள், தொழில் புத்தாக்க மையங்கள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த தசோ சிஸ்டம், ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த சீமென்ஸ் மற்றும் அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனமான ஜி.இ.ஏவியேஷன் உடன் இணைந்து இந்த மையங்களை தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. திருப்பெரும்புதூர் மற்றும் ஒசூரில் உள்ள சிப்காட் தொழிற்பூங்காக்களில் உலகத்தரம் வாய்ந்த தொழில் புத்தாக்க மையமும் அமைக்கப்பட்டு உள்ளன.

### ஜனவரியில் - சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு!

இந்த வசதி வாய்ப்புகளை அனைத்துத் தொழில் நிறுவனங்களும் பயன்படுத்தி தங்களின் தொழில் வளர்ச்சியை மேம்படுத்திக் கொள்ளுங்கள் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை வருகிற ஜனவரி மாதம் சென்னையில் நடத்த இருக்கிறோம். உலகம் முழுவதும் இருந்து பல்வேறு தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி வர இருக்கின்றன. அதற்கு முன்னதாகவே ஹிட்டாச்சி நிறுவனம் இந்தத் தொழில்நுட்ப மையத்தைத் தொடங்கி இருப்பது மகிழ்ச்சியை அளிக்கிறது.

பொதுவாக முதலீடுகளை ஈர்ப்பதற்கு நிறுவனங்களுக்கு அரசு அழைப்பு விடுப்பது ஒரு நடைமுறை! ஆனால் ஹிட்டாச்சி போன்ற நிறுவனங்கள் தமிழ்நாட்டுடனும், தமிழ்நாடு அரசுடனும் நெருக்கமான நிறுவனமாக இருக்கின்ற காரணத்தால், அழைப்பு விடுக்கத் தேவையில்லை. உங்களைப் போன்ற நிறுவனங்களுடன் இணைந்துதான் முதலீட்டாளர் மாநாட்டை நாங்கள் நடத்தயிருக்கிறோம். உங்களைப் போன்ற பிற ஜப்பானிய தொழில் நிறுவனங்களையும் அந்த மாநாட்டில் பங்கேற்கச் செய்வீர்கள் என நான் எதிர்பார்க்கிறேன். உங்களது தொழில் முயற்சிகள் வெற்றி பெற என்னுடைய வாழ்த்துகளை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (05.10.2023) ஒடிசா மாநிலம், புவனேஸ்வரில் 20.09.2023 முதல் 30.09.2023 வரை நடைபெற்ற ஹீரோ ஜூனியர் தேசிய சாம்பியன்ஷிப் 17–வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் பிரிவு கால்பந்து போட்டியில் வெற்றி பெற்று பதக்கங்கள் வென்ற தமிழ்நாடு பெண்கள் அணியைச் சார்ந்த வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் தலா ரூ.1 இலட்சம் வீதம் ரூ.22 இலட்சம் உயரிய ஊக்கத்தொகைக்கான காசோலைகளை சென்னை முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அரசியல் நோக்கத்திற்காக ஒன்றிய பா.ஜ.க. அரசு

# விசாரணை அமைப்புகளை தவறாகப் பயன்படுத்துவதா?

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, அக்.7-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூகவலைதளப் பதிவில் எதிர்க்கட்சிகள் மீது ஒன்றிய பா.ஜ.க. அரசின் பழிவாங்கும் அரசியல் எல்லைகளற்று நீளுகிறது எனவும், அரசியல் நோக்கத்திற்காக விசாரணை அமைப்புகளை ஒன்றிய அரசு தவறாகப் பயன்படுத்துகிறது என்றும் சட்டத்தையும், மக்களாட்சியையும் துச்சமாக மதித்து செயல்படுவதில் பா.ஜ.க. குறியாக இருக்கிறது எனவும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

ஒன்றிய பா.ஜ.க. அரசின் பழிவாங்கும் அரசியல் எல்லைகளற்று நீளுகிறது.

ஆம் ஆத்மி கட்சி எம்.பி சஞ்சய் சிங் அவர்களின் கைதும், தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன் அவர்களின் இல்லத்தில் நடந்த சோதனைகளும் சுதந்திரமாகச் செயல்பட வேண்டிய விசாரணை அமைப்புகளை ஒன்றிய பா.ஜ.க. அரசு எப்படி அரசியல் நோக்கத்துடன் இந்தியா கூட்டணித் தலைவர்களுக்கு எதிராகத் தவறாகப் பயன்படுத்திக்கொள்கிறது என்பதற்கான தெள்ளத்தெளிவான எடுத்துக்காட்டுகளாகும். எதிர்க்கட்சித் தலைவர்கள் மீதான இத்தகைய திட்டமிட்ட பழிவாங்கும் நடவடிக்கைகள் ஜனநாயகத்தின் மீதான தாக்குதல். அமலாக்கத்துறை வெளிப்படைத்தன்மையோடும் நியாயமாகவும் நடந்து கொள்ள வேண்டும் என்று உச்சநீதிமன்றம் எச்சரித்துள்ளதை பா.ஜ.க வசதியாக மறந்து விடுகிறது. ஆனால், சட்டத்தையும் மக்களாட்சியையும் துச்சமாக மதித்துச் செயல்படுவதிலேயே குறியாக இருக்கிறார்கள்.

எதிர்க்கட்சிகளிடையே தொடர்ந்து வளர்ந்து வரும் ஒற்றுமையைக் கண்டு பா.ஜ.க அஞ்சி நடுங்குவது இதன் மூலம் நன்கு தெரிகிறது. பழிவாங்கும் நடவடிக்கைகளை விடுத்து உண்மையான பிரச்சினைகளைத் தீர்க்க அவர்கள் கவனம் செலுத்துவது நல்லது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

# சிசோடியா மீதான புகாருக்கு ஆதாரம் எங்கே?

## உச்ச நீதிமன்றம் கேள்வி!

புதுடெல்லி, அக். 7-

டெல்லியில் ஆளும் ஆம் ஆத்மி அரசு கடந்த 2021-ல் புதிய மதுபான கொள்கையை அமல்படுத்தியது. இதில் முறைகேடு நடந்ததாக புகார் எழுந்தது. இதையடுத்து, சி.பி.ஐ., அமலாக்கத் துறை ஆகியவை தனித்தனியாக வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றன.

இந்த வழக்கில் டெல்லி முன்னாள் துணை முதல்வர் மணிஷ் சிசோடியா உள்ளிட்ட சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில், மணிஷ் சிசோடியா தாக்கல் செய்த ஜாமீன் மனு, உச்சநீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது, சி.பி.ஐ. மற்றும் அமலாக்கத் துறை சார்பில் ஆஜரான வழக்கறிஞர்களிடம் நீதிபதிகள் கூறியதாவது:

டெல்லி மதுபான கொள்கை விவகாரத்தில் லஞ்சம் கைமாறியதாக கூறுகிறீர்கள்.

யார் அதை வழங்கினார்கள்?

இந்த வழக்கில் மணிஷ் சிசோடியா மீதான புகாருக்கு ஆதாரம் எங்கே?

தினேஷ் அரோரா என்பவரின் வாக்குமூலத்தைத் தவிர வேறு ஏதாவது ஆதாரமோ, ஆவணமோ இருக்கிறதா?

சட்டவிரோத பணப்பரிவர்த்தனை தடுப்பு சட்டத்தின் கீழ் இவர் மீது எப்படி குற்றம்சாட்டுகிறீர்கள்?

இவ்வாறு அடுக்கடுக்கான கேள்விகளை நீதிபதிகள் எழுப்பினர்.

# புழல் மத்திய சிறையில்-போதை ஒழிப்பு மறுவாழ்வு மையம் தொடக்கம்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி - சிறைத்துறை டி.ஜி.பி. அமரேஷ் பூஜாரி பங்கேற்பு!

*சென்னை,அக்.7-*

சென்னை புழல் மத்திய சிறையில் போதை ஒழிப்பு மறுவாழ்வு மையம் சட்டம், நீதி, சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்தார். இதே போன்று மற்ற இரண்டு சிறைகளிலும் போதை ஒழிப்பு மறுவாழ்வு மையம் துவக்கி வைக்கப்பட்டது.

புழல் மத்தியசிறை 1 (தண்டனை) சிறையில் SIFEL தொண்டு நிறுவனத்தின் சார்பில் கிராமிய விளையாட்டுகள் சட்டம், நீதி, சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதியாக துவக்கி வைக்கப்பட்டது. சிறைவாசிகள் பலரும் அதில் பங்கேற்று மகிழ்ச்சியுடன் விளையாடினர்.

இந்நிகழ்வின் போது R.R.R( Reformation, Rehabilitation and Reintegration) Coffee Table Book அமைச்சர் எஸ்.ரகுபதி வெளியிட்டார்.

இந்நிகழ்வில் சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறை தலைமை இயக்குநர் அமரேஷ் புஜாரி, முன்னிலை வகித்தார், சிறைத்துறை தலைமையிட டி.ஐ.ஜி இரா. கனகராஜ், சென்னை சரக சிறைத்துறை டி.ஐ.ஜி. ஆ.முருகேசன், சிறை கண்காணிப்பாளர்கள் திருமதி.நிகிலா நாகேந்திரன், இரா.கிருஷ்ணராஜ், SIFEL தொண்டு நிறுவன நிறுவனர் ஸ்ரீராம், ரோட்டரி கிளப் சென்னை வடக்கு தலைவர் ஜி.விஜயராகவன் ஆகியோர் மற்றும் சிறைத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சிறைவாசிகளுக்கான கிராமிய விளையாட்டில் முக்கியமாக லெமன் மற்றும் ஸ்பூன், இசைநாற்காலி, கயிறு இழுத்தல், உறியடித்தல், பந்து நகர்த்தல் விளையாட்டு மற்றும் இசைநடன நிகழ்வு ஆகியன சிறைவாசிகளால் விளையாடப்பட்டன. இந்த கிராமிய விளையாட்டுகள் அனைத்து சிறைகளிலும் விரைவில் துவங்கப்பட உள்ளன.



தமிழ்நாடு அரசு பொதுநலத்துறை பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக பணி புரியும் 446 ஊர்ப்புற நூலகர்களுக்கு மூன்றாம் நிலை நூலகர்களாக பதவி உயர்வு வழங்க விரைவில் அரசாணை வெளியிடப்படும் என்று அறிவித்துள்ள முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியை தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறை பணியாளர் கழகம் சி&டி இன் மாநிலத்தலைவர் மு.ராஜேஷ்குமார், ஏராளமான ஊர்ப்புற நூலகர்கள் மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகளுடன் சந்தித்து மலர் மாலையுடன் நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர்.



நேற்று முன்தினம் (05.10.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கோயம்புத்தூரில் 21.10.2023 மற்றும் 22.10.2023 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள தமிழ்நாடு சைக்கிளிங் லீக் போட்டிக்காக "தமிழ்நாடு சாம்பியன்ஸ்" அறக்கட்டளை சார்பில் ரூ.5 இலட்சத்திற்கான காசோலையினை போட்டி நடத்தும் அமைப்பாளர்களிடம் சென்னை முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கி, போட்டிக்கான கோப்பை, இலச்சினை மற்றும் டீ–ஷர்ட்களை அறிமுகப்படுத்தினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, அரசு உயர் அலுவலர்கள் மற்றும் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி 04.10.2023 அன்று வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் இயங்கும் நகர் ஊரமைப்பு இயக்ககத்திற்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட 7 இளநிலை உதவியாளர்கள் மற்றும் 1 தட்டச்சர் பணியிடங்களுக்கான பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி. அபூர்வா, நகர் ஊரமைப்பு இயக்குநர் பா.கணேசன் ஆகியோர் உள்ளனர்.

### புற்றுநோய் சிகிச்சைக்காக,

# பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து நிவாரணம்!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. க்கு பிரதமர் அலுவலகம் கடிதம்!

புதுடெல்லி, அக். 7 –

திராவிட முன்னேற்றக் கழகப் பொருளாளரும், கழக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்கள், சென்னை நந்தம்பாக்கம் பகுதியைச் சேர்ந்த ஏழுமலை மற்றும் சென்னை நெற்குன்றம் பகுதியைச் சேர்ந்த வேதகிரி ஆகியோரது புற்றுநோய் சிகிச்சைகளுக்காக பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து உதவிடுமாறு முறையே 19.05.2023 மற்றும் 22.05.2023 ஆகிய தேதிகளில் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்குத் தனித் தனியே கடிதங்கள் எழுதியிருந்தார்.



டி.ஆர்.பாலு அவர்களின் பரிந்துரையினையும் வேண்டுகோளினையும் ஏற்ற பிரதமர் அவர்கள், ஏழுமலை மற்றும் வேதகிரி ஆகிய இருவரின் புற்றுநோய் சிகிச்சைக் களுக்காகவும் தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பிரதமர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பிரதமர் அலுவலகம், டி.ஆர்.பாலு எம்.பி. க்கு, 05.06.2023 தேதியிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ள விவரம் பின் வருமாறு:

பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து, ஏழுமலை மற்றும் வேதகிரி ஆகியோரது புற்றுநோய் சிகிச்சைகளுக்காகவழங்கப்படும் உதவித் தொகையான தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயானது, பயனாளர்கள் சிகிச்சை பெறும் சென்னையில் உள்ள அடையாறு புற்றுநோய் மையத்திற்கு வழங்கப்படும் என்றும், சிகிச்சை முடிந்த பின்னர், உரிய ஆவணங்களின் நகலை பிரதமர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும், ஆவணங்கள் கிடைத்த பின்னர், உதவித் தொகையானது உடனடியாக மேற்குறிப்பிட்ட மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும், பிரதமர் அலுவலகக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஈரோட்டில் முத்தமிழறிஞர் கலைஞரின்

# திரைப்பட வசனங்கள் - கவிதை ஒப்பித்தல் போட்டி!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சு.முத்துசாமி தலைமை!

ஈரோடு, அக். 7-

ஈரோடு தெற்கு மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டுவிழாவையொட்டி கலைஞர் எழுதிய திரைப்பட வசனங்கள் மற்றும் கவிதை ஒப்பித்தல் போட்டி மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி தலைமையில் நடைபெறுகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட கழக கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில் மாவட்ட கழக செயலாளரும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சருமான சு.முத்துசாமி தலைமையில் நாளை (8.10.2023 - ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணிக்கு ஈரோடு தெற்கு மாவட்ட கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற உள்ளது.

9, 10, 11, 12 வகுப்பு பயிலும் மாணவ - மாணவிகள் கலைஞர் எழுதிய திரைப்பட வசனங்கள் மற்றும் கவிதைகளில் 25 வரிகளுக்கு மிகாமலும், குறையாமலும் திறம்பட ஒப்பிக்கும் மூவரை தேர்வு செய்து மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிக்கு அனுப்பி வைக்கப்படும். மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவ மாணவிகளுக்கு முதல் பரிசு 5 ஆயிரம், இரண்டாம் பரிசு 3 ஆயிரம், முன்றாம் பரிசு 2 ஆயிரம் வழங்கப்படும்.

மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவ மாணவிகள் மண்டல அளவில் நடைபெறும் போட்டிக்கு அழைத்து செல்லப்படுவர். மண்டல அளவில் முதல் பரிசு 10 ஆயிரம், இரண்டாம் பரிசு 5 ஆயிரம், மூன்றாம் பரிசு 3 ஆயிரம் வழங்கப்படும்.

மண்டல அளவில் வெற்றி பெறும் மாணவ-மாணவிகள் மாநில அளவில் நடைபெறும் போட்டிக்கு அழைத்துச் செல்லப்படுவர் மாநில அளவில் வெற்றி பெறும் மாணவ மாணவிகளுக்கு முதல் பரிசு 25 ஆயிரம், இரண்டாம் பரிசு 15 ஆயிரம், மூன்றாம் பரிசு 10 ஆயிரம் ரூபாயும் பரிசாக வழங்கப்படும்.

இவ்வாறு கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் சித்தோடு சி.எஸ்.பிரகாஷ் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.



புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி கறம்பக்குடி தெற்கு ஒன்றியம் வெட்டன்விடுதி அரசு மேல்நிலை பள்ளி, முள்ளங்குறிச்சி அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலை பள்ளி மற்றும் கோட்டைக்காட்டிள் அரசு உதவிபெறும் பள்ளியில் மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசு விலையில்லா மிதிவண்டிகளை வை.முத்துராஜா எம்.எல்.ஏ வழங்கி மாணவர்களிடயே சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் கறம்பக்குடி தெற்கு ஒன்றிய செயலாளர் தவ.பாஞ்சாலன், கவுன்சிலர் ராஜேந்திரன்,ஊராட்சி மன்ற தலைவர் செந்தில்குமார்,பி.டி.ஏ. தலைவர் மாரிமுத்து, கழக நிர்வாகிகள் செழியன்,காசிநாதன், மணிக்கிளாஸ், சரவணன் உள்ளிட்ட கழக உடன்பிறப்புகள் கலந்துகொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நீலநாராயணன்

### அக்டோபர் 7 (1996)



எல்லோராலும் 'நீலம்' என்று அன்புடன் அழைக்கப்பட்டவர்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரிடம் அளவற்ற பற்றும் பாசமும் கொண்டவர்.

கழக அமைப்புச் செயலாளராகவும் சென்னை மாவட்டக் கழகச் செயலாளராக இரு முறையும் பணியாற்றியவர்.

தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தவர்.

தலைமைக் கழகச் சார்பில் 'பெரியார் விருது' பெற்றவர்.

கழகம் அறிவித்த பல போராட்டங்களில் சிறை சென்றதோடு மிசா கைதியாக ஓராண்டு சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### தமிழ்நாட்டில் வகுப்புவாதக் கலவரங்களுக்குத் தூபம் போடும்

# பிரதமர் மோடியின் கனவு பலிக்காது!

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.எஸ்.அழகிரி கண்டனம்!

சென்னை, அக். 7-

"தமிழ்நாட்டில் வகுப்புவாதக் கலவரங்களுக்குத் தூபம் போடும் பிரதமரின் கனவு என்றைக்கும் பலிக்காது'' என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.எஸ்.அழகிரி கண்டனம் தெரிவத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

தென் மாநிலங்களில் இந்து கோயில்களை மாநில அரசாங்கம் வலுக்கட்டாயமாக தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது, கோயில் சொத்துகளையும், அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தையும் முறைகேடாக பயன்படுத்தி வருகிறது, இது ஒரு அநீதி. ஜாதிவாரிய மக்கள் தொகை கணக்கெடுப்பிற்காக உரிமை எழுப்பும் காங்கிரஸ் கட்சி கோயில்களை மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்துமா ? என்று தெலுங்கானாவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி தேவையற்ற சர்ச்சையை எழுப்பியிருக்கிறார். இந்தியாவில் மற்ற மாநிலங்களில் இருப்பதைவிட தமிழ்நாட்டில் கோயில் நிர்வாகம் என்பது இந்து சமய அறநிலையத்துறை என்ற அமைப்பின் மூலம் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் 1927 ஆம் ஆண்டிலேயே சட்டத்தின் மூலம் கொண்டு வரப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 1951லும், பிறகு 22 ஜனவரி 1959 இல் இந்து சமய அறநிலையத்துறை சட்டம் கொண்டு வரப்பட்டு தமிழகத்திலுள்ள கோயில்கள் அனைத்தும் அரசுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டு மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

**பிரதமர் அறிந்திருக்க வாய்ப்பில்லை!**

இத்தகைய நிர்வாகத்தின் மூலம் கோயில்கள் என்பது யார் வேண்டுமானாலும் உள்ளே சென்று கடவுளை தரிசிக்கவும், வழிபடவும் முழு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. 1931 ஆம் ஆண்டிலேயே ஆலயங்களில் அரிஜன பிரவேசம் மறுக்கப்பட்ட போது மதுரை வைத்தியநாத ஐயர் மீனாட்சி அம்மன் கோயிலில் தியாகி கக்கன் உள்ளிட்ட அரிஜனங்களை அழைத்துக் கொண்டு போராட்டம் நடத்திய வரலாற்றை பிரதமர் மோடி அறிந்திருக்க வாய்ப்பில்லை.

தமிழ்நாட்டில் நீண்ட நெடுங்காலமாக இராமானுஜர், வள்ளலார், தந்தை பெரியார் ஆகியோர் சமய சீர்திருத்த கருத்துகளை பரப்பி, கோயில்களில் வழிபாட்டு உரிமையை பெற்றுத் தந்த வரலாற்றுப் பெருமை தமிழகத்திற்கு உண்டு. அந்த அடிப்படையில் தமிழகத்தில் உள்ள கோயில்களில் எந்த பாகுபாடும், தவறுகளும், தனிப்பட்ட சிலருடைய ஆதிக்கத்தையும் தடுத்து நிறுத்துகிற வகையில் இந்து சமய அறநிலையத்துறை இந்தியாவிற்கே முன்மாதிரியாக செயல்பட்டு வருகிறத.

பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்த போது, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சராக தலித் சமுதாயத்தைச் சேர்ந்த பி. பரமேஸ்வரன் அவர்களை நியமித்து புரட்சி செய்ததை எவரும் மறந்திட இயலாது. அத்தகைய நியமனத்தின் மூலம் எந்த கோயில்களில் நுழைய எந்த சமுதாயம் மறுக்கப்பட்டதோ, அதே சமுதாயத்தைச் சேர்ந்தவரை அமைச்சராக நியமித்து கோயில்களில் அவருக்கு பரிவட்டம் கட்டி வரவேற்ற காட்சியை பார்த்து நாடே மகிழ்ந்தது. இந்து மதத்திற்குள்ளாக இருந்த ஜாதிய ஏற்றத் தாழ்வுகளை அகற்றி, சனாதன அணுகுமுறையை புறக்கணிக்கிற பணியை தமிழகம் நீண்ட காலமாக செய்து வருகிறது.

**இந்து கோவில்களில் ஆன்மீகப் புரட்சி!**

தமிழகத்தைப் பொறுத்தவரை முதலமைச்சராக மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு



இந்து சமய அறநிலையத் துறை அமைச்சராக பி.கே. சேகர்பாபு அவர்கள் நியமிக்கப்பட்டு இந்து கோயில்களில் ஒரு ஆன்மீகப் புரட்சியே நடைபெற்று வருகிறது. தமிழகத்தில் 36,425 கோயில்களும், 56 மடங்களும், ஏறத்தாழ 5 லட்சம் ஏக்கர் நிலங்களையும் இன்றைக்கு இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகம் செய்து கொண்டிருக்கிறது.

இவர் அமைச்சராக பொறுப்பேற்று கடந்த 2 ஆண்டுகளில் தனியார் வசமிருந்து ரூபாய் 5137 கோடி மதிப்புள்ள கோயில்கள் சொத்துகள் மீட்கப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான திருக்கோயில்களில் குடமுழுக்குகள், வருமானம் இல்லாத கோயில்கள் அனைத்திலும் ஒருகால பூஜை நடத்துவதற்கு நிதியுதவியும், எல்லாவற்றுக்கும் மேலாக தந்தை பெரியாரின் கனவை நினைவாக்குகிற வகையில் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகும் வகையில் பெண்கள் உள்ளிட்ட பலர் ஓதுவார்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். கோயிலின் கர்ப்ப கிரகத்திற்குள் நுழையக் கூடாது, கோயில் கொடி மரத்தை தாண்டி உள்ளே செல்லக் கூடாது என்ற கட்டுப்பாடுகள் தகர்க்கப்பட்டு கோயிலுக்குள் அனைத்து ஜாதியினரும் வேறுபாடின்றி உள்ளே நுழைந்து வழிபடுகிற உரிமையை பறிக்கிற வகையில் பிரதமர் மோடி பேசியிருப்பது கடுமையான கண்டனத்திற்குரியது. இத்தகைய அநீதிகள் எல்லாம் கோயில்கள் ஒருசில தனியாரின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த போது நடைபெற்றது.

**பிரதமர் உணர வேண்டும்!**

சில நூறு ஆண்டுகளுக்கு முன்பாக சிதம்பரம் நடராஜர் கோயிலில் கடவுளை தரிசிக்க நந்தனாருக்கு அனுமதி மறுக்கப்பட்ட போது, அதற்காக தீக்குளித்து உயிர் நீத்த வரலாறு தமிழகத்தில் நிகழ்ந்திருப்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இத்தகைய மாபெரும் புரட்சியை ஒட்டித்தான் இன்றைக்கு தமிழகத்தில் உள்ள அனைத்து கோயில்களும் அனைவருக்கும் பொதுவாக செயல்பட்டு வருகிறது என்பதை பிரதமர் மோடி உணர வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், சிறுபான்மையினர் நடத்தும் வழிபாட்டுத் தலங்களை ஏன் அரசு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவில்லை என்று பிரதமர் மோடி கேள்வி எழுப்பியிருக்கிறார். கோயில்களுக்கு இந்து சமய அறநிலையத் துறை இருப்பதைப் போல, பள்ளிவாசல் மற்றும் தர்காக்களுக்கு வக்பு வாரியம் என்ற அரசுத்துறை உண்டு. இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் போல இதற்கும் அமைச்சர் உண்டு. தற்போது இந்து சமய அறநிலையத்துறை அமைச்சராக சேகர்பாபு இருப்பதை போல வக்பு வாரிய துறைக்கு செஞ்சி மஸ்தான் இருக்கிறார். இதற்கென செயலாளராக தனி ஐ.ஏ.எஸ். அதிகாரி உள்ளிட்ட உறுப்பினர்கள் செயல்பட்டு அனைத்து பள்ளிவாசல் மற்றும் தர்காக்களை நிர்வகித்து வருகின்றனர். சமயத்தின் அடிப்படையில் இங்கே என்ன பாரபட்சம் உள்ளது என்பதை பிரதமர் மோடி உணர வேண்டும்.

இந்தியாவிலேயே அமைதி பூங்காவாக இருக்கிற தமிழ்நாட்டில் மத மாச்;சர்யங்களை உருவாக்கி, வகுப்புவாத கலவரங்களுக்கு தூபம் போட்டு பா.ஜ.க.வை வளர்த்துவிடலாம் என்ற பிரதமர் மோடியின் கனவு என்றைக்கும், எந்த காலத்திலும் நிறைவேறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அவ்வாறு கே.எஸ்.அழகிரி தமதுஅறிக்கையில் கூறியுள்ளார்.



பீளமேடு அண்ணாநகர் அலுவலகத்தில், நேற்று முன்தினம் கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா. கார்த்திக் தலைமையில், கோவை மாநகர் மாவட்டக் கழக நிர்வாகிகள்,பகுதிக்கழகச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கூட்டுறவு சங்கத் தேர்தல்கள், இளைஞரணி மாநாடு, மகளிர் அணி மாநாடு, மற்றும் கழக ஆக்கப்பணிகள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது. இக் கூட்டத்தில்,மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் தளபதி இளங்கோ,கல்பனா செந்தில்,மாநகர் மாவட்ட பொருளாளர் எஸ். எம். பி. முருகன்,தலைமை செயற்குழு உறுப்பினர் வே. பாலசுப்பிரமணியன்,சிங்காநல்லூர் பகுதி 1 செயலாளர் எஸ். எம். சாமி,சிங்காநல்லூர் பகுதி2 செயலாளர் சிங்கை மு. சிவா,சிங்காநல்லூர் பகுதி3 செயலாளர் ஷேக் அப் துல்லா,பீளமேடு பகுதி1 செயலாளர் துரை. செந்தமிழ் செல்வன்,பீளமேடு பகுதி2 செயலாளர் மா. நாக ராஜ்,பீளமேடு பகுதி3 செயலாளர் இரா. சேரலாதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில், நேற்று முன்தினம் (05.10.2023), சென்னை, எழும்பூர், அரசு நலவாழ்வு மற்றும் குடும்ப நல பயிற்சி மையத்தில், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை மற்றும் சிங்கப்பூர் சர்வதேச குழுமம் ஆகியவற்றிற்கு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்நிகழ்வில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், சிங்கப்பூர் குடியரசின் கான்சுலேட் ஜெனரல் எட்கர் பாங், சிங்கப்பூர் சர்வதேச குழுமத்தின் இயக்குநர் திருமதி.விஜயா ராவ், சிங்கப்பூர் கே.கே.பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை சீனியர் கன்சல்டன்ட் மரு.ஷிஃபாலி தாகூர். பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் (சிறப்பு பணி அலுவலர்) மரு.வடிவேலன், கூடுதல் இயக்குநர் மரு.சேகர், மரு.அ.சோமசுந்தரம், இணை இயக்குநர் (தா.சே.ந) மரு.ஜா.நிர்மல்சன், மரு.சம்பத்குமார் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேற்று முன்தினம் (05.10.2023) தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கிராமத்தெரு திட்டப்பகுதியில் ரூ.59.77 கோடி மதிப்பீட்டில் 336 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டினார். உடன் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதிவீராசாமி, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், சட்டமன்ற உறுப்பினர்கள் கே.பி.சங்கர், எஸ்.சுதர்சனம், மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு, மாமன்ற உறுப்பினர் திருமதி உமாசரவணன், வாரியதலைமைப் பொறியாளர் வே.சண்முகசுந்தரம், நிர்வாகப் பொறியாளர் ந.செந்தாமரைகண்ணன், வாரியப் பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

### ‘வள்ளலார் 200’ ஓராண்டு தொடர் அறநிகழ்வு நிறைவு விழாவில்

# வள்ளலார் சர்வதேச மையத்திற்கான ஆணை! முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

## புகைப்படக் கண்காட்சி - அன்னதானம் தொடங்கி வைப்பு!

சென்னை, அக். 7 -

“வள்ளலார் - 200” ஓராண்டு தொடர் அறநிகழ்வின் நிறைவு விழாவில் வள்ளலார் சர்வதேச மையத்திற்கான ஆணையினை வழங்கி, சிறப்புக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு சிறப்பு செய்து, புகைப்பட கண்காட்சி மற்றும் அன்னதானத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.10.2023) இந்து சமய அறநிலையத் துறை சார்பில் சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற “வள்ளலார் - 200” ஓராண்டு தொடர் அறநிகழ்வின் நிறைவு விழாவில், கடலூர் மாவட்டம், வடலூரில் 99 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள வள்ளலார் சர்வதேச மையத்திற்கான ஆணையினை வள்ளலார் முப்பெரும் விழா சிறப்புக் குழுவின் தலைவர் முனைவர் பி.கே.கிருட்டிணராஜ் வானவராயர் அவர்களிடம் வழங்கினார்.

மேலும், “வள்ளலாரின் இறை அனுபவங்கள்” என்ற நூலினை வெளியிட்டு, 52 வாரங்கள் முப்பெரும் விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்தியமைக்காக சிறப்புக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசுகளை வழங்கி சிறப்பித்து, வள்ளலாரின் வாழ்க்கை வரலாறு மற்றும் தமிழ்நாடு முழுவதும் 52 வாரங்கள் நடத்தப்பட்ட வள்ளலார் முப்பெரும் விழா நிகழ்ச்சிகளை தொகுத்து அமைக்கப்பட்ட சிறப்பு புகைப்பட கண்காட்சியினை திறந்து வைத்து, அன்னதானத்தையும் தொடங்கி வைத்தார்.

அருட்பிரகாச வள்ளலார் என்று அழைக்கப்படும் இராமலிங்க அடிகளார் பிறந்த அக்டோபர் 5 ஆம் நாள் இனி ஆண்டுதோறும் “தனிப்பெருங் கருணை நாள்” என கடைபிடிக்கப்படும் என முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். அதனைத் தொடர்ந்து 2021 ஆம் ஆண்டு முதல் அக்டோபர் 5 ஆம் நாள் ”தனிப்பெருங்கருணை நாளாக” கொண்டாடப்பட்டு வருகிறது.

2022-2023 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையில், “உயிர்த்திரள் ஒன்றெனக்கூறி தனிப்பெரும் கருணை ஆட்சி நடத்திய வள்ளல் பெருமானார் தருமசாலை துவக்கிய 156-வது ஆண்டு தொடக்கமும் (25.5.2022) வள்ளல் பெருமான் இவ்வுலகிற்கு வருவிக்க உற்ற 200-வது ஆண்டு தொடக்கமும் (5.10.2022) ஜோதி தரிசனம் காட்டுவித்த 152-வது ஆண்டும் (5.02.2023) வரவிருப்பதால் இம்மூன்று நிகழ்வுகளையும் இணைத்து அவரது 200-வது அவதார ஆண்டான அக்டோபர் 2022 முதல் அக்டோபர் 2023 வரை 52 வாரங்களுக்கு முக்கிய நகரங்களில் முப்பெரும் விழா எடுக்கப்படும் இதற்கென ஒரு சிறப்புக்குழு அமைக்கப்படும்” என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, திருவருட் பிரகாச வள்ளலாரின் முப்பெரும் விழாவினை சிறப்புற நடத்திடும் வகையில் முனைவர் பி.கே.கிருட்டிணராஜ் வானவராயர் அவர்கள் தலைமையில் 14 உறுப்பினர்களைக் கொண்ட சிறப்புக்குழு அமைக்கப்பட்டு வள்ளலாரின் முப்பெரும் விழாவினை அக்டோபர் 2022 முதல் அக்டோபர் 2023 வரை, 52 வாரங்களுக்கு தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் சிறப்பாக நடத்திட செயல் திட்டங்கள் வகுக்கப்பட்டன.

முதல்நிகழ்ச்சியாக, முதலமைச்சர் அவர்கள் தலைமையேற்று 5.10.2022 அன்று சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், அருள்மிகு கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில், வள்ளலார் முப்பெரும் விழாவினை தொடங்கி வைக்கும் வகையில், “வள்ளலார் - 200” இலச்சினை, தபால் உறை மற்றும் சிறப்பு மலர் ஆகியவற்றை வெளியிட்டு, 52 வாரங்களுக்கான விழாக்களில் முதல் வார நிகழ்ச்சிகளையும், ஆண்டு முழுவதும் அன்னதானம் வழங்கும் நிகழ்வையும் தொடங்கி வைத்தார்.

மேலும், முதலமைச்சர் அவர்கள் 25.04.2023 அன்று திருவருட்பிரகாச வள்ளலாரின் முப்பெரும் விழா மற்றும் தொடர் அன்னதானத்தினை செயல்படுத்திடும் வகையில், தமிழ்நாடு அரசின் மானியமாக ரூ.3.25 கோடி காசோலையை சிறப்புக் குழுவின் தலைவர் அவர்களிடம் வழங்கினார்.

தமிழ்நாடு முழுவதும் முக்கிய நகரங்களில் வள்ளலாரின் பெருமையை பறைசாற்றுகின்ற வகையில் 52 வாரங்கள் நடத்தப்பட்ட பல்வேறு நிகழ்ச்சி களில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தது டன், போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி, அன்னதானத்தையும் தொடங்கி வைத்தனர்.

“வள்ளலார் - 200” ஓராண்டு தொடர் அறநிகழ்வின் நிறைவு விழாவான நேற்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடலூர் மாவட்டம், வடலூரில் 99 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள வள்ளலார் சர்வதேச மையத்திற்கான ஆணையினை வள்ளலார் முப்பெரும் விழா சிறப்புக் குழுவின் தலைவர் அவர்களிடம் வழங்கினார். மேலும், “வள்ளலாரின் இறை அனுபவங்கள்” என்ற நூலினை வெளியிட்டு, 52 வாரங்கள் முப்பெரும் விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்தியமைக்காக வள்ளலார் முப்பெரும் விழா சிறப்புக் குழுவின் தலைவர் முனைவர் பி.கே.கிருட்டிணராஜ் வானவராயர், உறுப்பினர்கள் முது முனைவர் சத்தியவேல் முருகனார், கே.என். உமாபதி, சிவ மெய்யப்பன், முனைவர் உலகநாயகி,.மெய். அருள்நந்தி சிவம்,. கே.உமாபதி,. என்.இளங்கோ, .எம்.கலைச்செல்வன்,.ஜி.சந்திரசேகர ஆகியோருக்கு பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசுகளை வழங்கி, சிறப்பித்தார்.

அதனைத் தொடர்ந்து, வள்ளலாரின் வாழ்க்கை வரலாறு மற்றும் தமிழ்நாடு முழுவதும் 52 வாரங்கள் நடத்தப்பட்ட வள்ளலார் முப்பெரும் விழா நிகழ்ச்சிகளை தொகுத்து அமைக்கப்பட்ட சிறப்பு புகைப்பட கண்காட்சியினை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, அன்னதானத்தை தொடங்கி வைத்தார்.

இவ்விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், திருவாவடுதுறை ஆதீனம் சீர்வளர்சீர் அம்பலவாண தேசிகர் பரமாச்சாரிய சுவாமிகள், குன்றக்குடி ஆதீனம் சீர்வளர்சீர் பொன்னம்பல அடிகளார், பேரூர் ஆதீனம் சீர்வளர்சீர் மருதாச்சல அடிகளார், சிரவை ஆதீனம் சீர்வளர்சீர் குமரகுரு பர சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம் சீர்வளர்சீர் சிவ ஞானபாலய தேசிகர், வேளாக்குறிச்சி ஆதீனம் சீர்வளர்சீர் சத்திய ஞான மகாதேவ தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், சூரியனார் கோயில் ஆதீனம் சீர்வளர்சீர் மகாலிங்க தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், வள்ளலார் முப்பெரும் விழா சிறப்புக் குழுத் தலைவர் முனைவர் பி. கே. கிருட்டி ணராஜ் வானவராயர் மற்றும் உறுப்பினர்கள், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ.குமரகுரு பரன், ஆணையர்.க.வீ.முரளீ தரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந. திருமகள், திருமதி மா.கவிதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை!



புதுக்கோட்டை, அக். 7 -

புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

இன்று (07.10.2023 - சனிக்கிழமை) மாலை 5 மணியளவில் புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா (ஏ.சி.) திருமண மகாலில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம் புதுக் கோட்டை வடக்கு மாவட்ட அவைத் தலைவர் அரு.வீரமணி தலைமையிலும், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத் துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் , மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம். அப்துல்லா, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ , அறந்தாங்கி ராசன் , பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப்பித்தன் , புதுக்கோட்டை விஜயா, பி.டி.அரசக்குமார் , த.சந்திரசேகரன் , அஞ்சுகா மீனாட்சி சுந்தரம் , வி.என்.மணி , மிசா சி.ராமநாதன், செ.அசோக் பாண்டியன், பரணி இ.ஏ. கார்த்திகேயன், டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை, கே.ஆர்.என்.போஸ், சுப. சரவணன் , கீரை.தமிழ் ராஜா , சு.சண்முகம், மாவட்ட கழக நிர்வாகிகள் எஸ்.எஸ்.கருப்பையா, பி. ராஜேஸ்வரி , க.மதியழகன் , எம்.லியாகத் அலி, ஆ. செந்தில் , ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது. இந்நிகழ்வுகளில் மாநில , மாவட்ட நிர்வாகிகள் , பொதுக்குழு உறுப்பினர்கள் , ஒன்றிய , நகர , பேரூர் கழக செயலாளர்கள் , ஒன்றியப் பெருந்தலைவர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறி உள்ளார்.



சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில், சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் (5.10.2023) நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் டாக்டர். க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுவில் தீர்மானம்!

# இளைஞர் அணி - மகளிரணி மாநாட்டில் திரளாகப் பங்கேற்போம்!

## மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!



நாகை. அக். 7 -

நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் கூட்டுறவு சங்க தேர்தலில் 100 சதவீதம் வெற்றி பெறுவது, மகளிர் மற்றும் இளைஞர் அணி மாநாட்டிற்கு நாகை மாவட்டத்தில் இருந்து அதிக அளவில் மகளிர், இளைஞர் அணியினரை கலந்து கொள்ள செய்வது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் தெரிவித்துள்ளார்.

நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன் தலைமை தாங்கினார். தாட்கோ தலைவர் உ.மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இல.மேகநாதன், க.ராஜேந்திரன், ப.கோவிந்தராசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆரூர் மணிவண்ணன் வரவேற்றார். கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்து மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் பேசினார். கூட்டத்தில் மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாவட்ட கழக துணைச் செயலாளர் கற்பகம், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.பழனியப்பன், எம்.பாண்டியன், பன்னீர்செல்வம், கோ.சிவக்குமார் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன், மகா.குமார், கே.பழனியப்பன், செல்வ.செங்குட்டுவன், சிக்கல் என்.ஆனந்த், என்.சதாசிவம், உதயம் வே.முருகையன், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, மா.மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், மாநில சிறுபான்மை அணி துணைச் செயலாளர் சாகுல்ஹமீது, பேரூர் கழகச் செயலாளர்கள் கா. அட்சயலிங்கம், முகமது சுல்தான், மரியசார்லஸ், சி.சுப்பரமணியன், சார்பு அணி அமைப்பாளர்கள் இரா.முருகையன், பி.என். கார்த்தி, ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, ப.உதயக்குமார், ஆர்.துரைராஜ், கேஸ் வி. செந்தில், அ.பாரிபாலன், பெ.ஆனந்த், சாகுல்ஹமீது ராஜா, எஸ்.பால்ராஜ், எஸ். பி.டி.அருள், க.சத்தியமூர்த்தி, இளம்.சுந்தர், புவனேஷ்வரிசெந்தில், தமயேந்தி, சுரேந்தர், எஸ். சந்தோஷ் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சுரேஷ், பன்னீர் செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

சென்னையில் அக்டோபர் 4ம் தேதி நடைபெற உள்ள மகளிர் உரிமை மாநாட்டில் நாகை மாவட்டத்தில் இருந்து பெண்கள் அதிக அளவில் கலந்து கொள்ளும் வகையில் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் , மாவட்ட மகளிர் அணி நிர்வாகிகள், மாவட்ட மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்றி மாநாட்டிற்கு அதிக அளவில் மகளிர்களை அழைத்து செல்வது என்றும், வரும் 27.10.2023 அன்று தேர்தல் ஆணையம் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுகிறது. தேர்தல் ஆணையத்தால் வரும் 4.11.2023, 5.11.2023, 18.11.2023, 19.11.2023 ஆகிய தேதிகளில் வாக்குசாவடி வாரியாக சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி வாக்காளர் பட்டியலை சரிபார்த்து அந்தந்தப் பகுதி வார்டு கழக, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், வாக்குச்சாவடி முகவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து வாக்காளர் சேர்த்தல், நீக்கம் பணிகளை செய்திட வேண்டும் என்றும், இந்த பணியை ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் தகுந்த ஆலோசனை வழங்கி வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியை சிறப்பாக செய்திட வேண்டும் என்றும்,

தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்ட பூத் கமிட்டி படிவத்தை திருத்தம் செய்ய ஏற்கனவே ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளதை சரிபார்த்து திருத்தம் செய்து படிவங்களை உடனடியாக மாவட்டக் கழகத்திடம் ஒப்படைக்க வேண்டுமென ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களை இந்த கூட்டம் கேட்டுக் கொள்கிறது என்றும், கூட்டுறவு சங்க தேர்தலை முன்னிட்டு கூட்டுறவு சங்கங்களில் உள்ள வாக்காளர் பட்டியல் சரிபார்த்து எதிர் வரும் 9.10.2023க்குள் நமது கழக உறுப்பினர்கள் அதிக அளவில் சேர்த்து கூட்டுறவு சங்கத் தேர்தல்களில் நமது கழக உறுப்பினர்கள் வெற்றி பெற தேவையான அனைத்து முயற்சி களையும் மேற்கொள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களை கேட்டுக் கொள்வதோடு கழகத்தலைவர்அவர்களின் எதிர்பார்பின் படி நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு சங்கங்களிலும் கழகத்தினர் வெற்றி பெற செய்து கழகத்தலைவரிடம் 100 சதவீத வெற்றியை சமர்ப்பிப்பது என்றும்,

தலைமைக் கழக வேண்டுகோளுக்கு இணங்க ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களின் சார்பு அணி நிர்வாகி களை ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் தேர்வு செய்து அந்த பட்டியலை உடன் மாவட்டக் கழகத்திடம் ஒப்படைத்திட வேண்டும் என்றும்,

வரும் 17.12.2023 அன்று சேலத்தில் நடைபெறும் இளைஞர் அணி மாநாட்டில் நாகை மாவட்டத்தில் இருந்து தொகுதிக்கு 2500 பேர் வீதம் 7500 பேர் கலந்து கொள்ள செய்திடுவது என்றும், இளைஞர் அணியினர் அதிக அளவில் கலந்து கொள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள் அனைவரும் முழு முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்றும், இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக உள்ள தமிழ்நாட்டில் ஒன்றாம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு நாகை மாவட்டம் திருக்குவளையில் தொடங்கி வைத்தமைக்கும், குடும்ப தலைவிகளுக்கு மகளிர் உரிமைத் தொகை ரூ. 1,000 வழங்கியமைக்கும் நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### வனத் துறை அமைச்சர் மா. மதிவேந்தன் பங்கேற்பு!

# நாமக்கல் மேற்கு மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் அறிமுகம் - ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிவிப்பு.



நாமக்கல், அக். 7 -

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக அணிகளின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை நடைபெறுகிறது. இதில அமைச்சர் மதிவேந்தன் பங்கேற்று ஆலோசனை வழங்குகிறார். இது குறித்து மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் புதியதாக நியமிக்கப்பட்ட அணிகளின் மாவட்ட தலைவர்கள், துணை தலைவர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், துணை ஒருங்கிணைப்பாளர்கள் அறிமுகம் மற்றும் ஆலோசனைக் கூட்டம் இன்று (07.10.2023 - சனிக்கிழமை) காலை 11 மணி அளவில் திருச்செங்கோடு சங்ககிரி சாலை உள்ள நந்தா டவர்ஸ் திருமண மண்டபத்தில் மாவட்ட கழக அவைத் தலைவர் நடனசபாபதி தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் வனத் துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் முன்னிலையில் நடைபெறுகிறது. இந்நிகழ்விற்கு நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் பங்கேற்கின்றனர்.

ஆகவே, இந்த அறிமுக கூட்டத்தில் இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, அமைப்பு சாரா ஓட்டுனர் அணி, தொழிலாளர் அணி, கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை, அயலக அணி, நெசவாளர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, தொண்டர் அணி மற்றும் மீனவர் அணி மாவட்ட தலைவர் துணைத் தலைவர்கள் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் ஒருங்கிணைப்பாளர்கள் துணை ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு நாமக்கல் மேற்கு மாவட்டச்செயலாளர் எஸ்.எம்.மதுராசெந்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க முன்னாள் அமைச்சரும், மாவட்டக் கழகச் செயலாளருமான டி.எம்.செல்வகணபதி வழிகாட்டுதல்படி, மேட்டூர் தொகுதி பார்வையாளர், கழக மாநில ஆதி திராவிடர் நலக் குழு இணை செயலாளர் திப்பம்பட்டி ஆறுசாமி தலைமையில் கொளத்தூர் ஒன்றியம், பேரூர் நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு.ராமநாதன், பொதுக்குழு உறுப்பினர் பழனியப்பன், ஒன்றிய கழகச் செயலாளர் மிதுன் சக்கரவர்த்தி, பேரூர் கழக செயலாளர் நடராஜன், பேரூராட்சி தலைவர் பால சுப்பிரமணியன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.10.2023) சென்னை, தீவுத் திடலில் நடைபெற்ற விழாவில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 500 பெண் ஓட்டுநர்கள் மற்றும் திருநங்கை ஓட்டுநர்களுக்கு புதிய ஆட்டோ ரிக்சா/ தொழில்முறை டாக்சி வாகனம் வாங்குவதற்கு 1 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ், 148 பெண் ஓட்டுநர்கள் மற்றும் 2 திருநங்கை ஓட்டுநர்களுக்கு புதிய ஆட்டோ ரிக்சாக்களை வழங்கும் விதமாக கொடியசைத்து தொடங்கி வைத்தார். இவ்விழாவில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி. பிரபாகரராஜா, துணை மேயர் மு. மகேஷ் குமார், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கேரள மாநிலம் கோழிக்கோட்டைச் சேர்ந்த வெளிமன்னா, தம்மை போல மாற்றுத் திறனுள்ள குழந்தைகளின் உரிமைக்காக தொடர்ந்து குரல் கொடுப்பதன் மூலம் உலக அளவில் அறிமுகமாகி அதன் மூலம், பல்வேறு அங்கீகாரங்களை பெற்றவராவார். சென்னை வருகை தந்துள்ளதை தொடர்ந்து குடும்பத்தாருடன் நேற்று முன்தினம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்தார். அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாற்றுத் திறனாளிகளின் நலன் சார்ந்து அவர் எடுத்து வரும் முன்னெடுப்புகளை கேட்டறிந்து அவருடைய பணிகள் சிறக்க வாழ்த்துத் தெரிவித்தார்.

### டெல்டா மாவட்டங்களில் போதிய நீரின்றி பாதிக்கப்பட்ட

# விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.13,500 இழப்பீடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, அக்.7 -

காவிரி ஆற்றில், கர்நாடக மாநிலத்திலிருந்து போதிய அளவு தண்ணீர் பெறப்படாததால், டெல்டா மாவட்டங்களில் குறுவை பயிர் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் டெல்டா மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில், குறுவை சாகுபடி செய்வதற்கு ஏதுவாக, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 12-6-2023 அன்று மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து வைக்கப்பட்டது. ஆனால், காவிரி ஆற்றில் கர்நாடக மாநிலத்திலிருந்து போதிய அளவு தண்ணீர் தொடர்ந்து பெறப்படாத காரணத்தால், மேட்டூர் அணையிலிருந்து விவசாயத்திற்கு போதிய அளவு தண்ணீர் திறந்து விட இயலாத நிலையில், தற்போது டெல்டா மாவட்டங்களில் ஏறத்தாழ 40 ஆயிரம் ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்கள் வாடிய நிலையில் பாதிக்கப்பட்டுள்ளது.

பயிர் பாதிப்பு விவரங்கள் முறையாக கணக்கிடப்பட்டு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.13,500/- இழப்பீடாக வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5-10-2023) உத்தரவிட்டுள்ளார்கள்.

### பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறியது!

# காட்பாடியில் மற்றொரு இரயில்வே மேம்பாலம் புதிதாக அமைக்கப்படும்!

## நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அறிக்கை!

காட்பாடி, அக்.7 -

பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கை நிறைவேறும் வகையில் காட்பாடியில் இன்னொரு ரயில்வே மேம்பாலம் புதியதாக அமைக்கப்படும் என்று கழகப் பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

கழக ஆட்சி அமையும் போதெல்லாம் தொடர்ச்சியாக பல வளர்ச்சித் திட்டங்களை பெற்று வருவது காட்பாடி தொகுதியாகும்.

1. பொன்னை மேம்பாலம், 2. திருவலம் சர்க்கரை ஆலை, 3. குடிக்க பாலாற்று தண்ணீர் (இப்போது காவிரி தண்ணீர்), 4.திருவள்ளுவர் பல்கலைக்கழகம், 5. காட்பாடியை தனி தாலுக்காவாக உருவாக்கியது, 6.நீதிமன்றங்கள், 7. சட்டக்கல்லூரி, 8. தீயணைப்பு நிலையம், 9. போக்குவரத்து காவல் நிலையம், 10.ஆரம்பப் பள்ளிகள், 11. மேல்நிலைப் பள்ளிகள், 12.உயர்நிலைப் பள்ளிகள், 13. காட்பாடியை வேலூருடன் இணைக்க விருதம்பட்டிற்கு அருகில் ஒரு பாலம், 14.அம்முண்டிபூட்டுத்தாக்கு பாலாற்று பாலம், 15.திருவலத்தில் பொன்னை ஆற்றின் மீது NH பாலம், 16.பல்வேறு அரசு அலுவலகங்கள், கலைஞர் காலத்தில் இப்படி பல திட்டங்களை பெற்றது காட்பாடி தொகுதியாகும்.

இன்றைய முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில்,



1. பொன்னையாற்றில் ஒரு மேம்பாலம், 2. பரமசாத்து, குகையநல்லூர், சேண்பாக்கம், அரும்பருத்தி போன்ற இடங்களில் தடுப்பணைகள், 3. மேல்பாடி அருகில் பொன்னையாற்றின் குறுக்கே ஒரு மேம்பாலம், 4. சேர்காட்டில் 100 படுக்கைகளை கொண்ட ஒரு நவீன மருத்துவமனை, 5. ஆண்கள் கலைக் கல்லூரி, 6. இந்த ஆண்டு வரப்போகிற SIPCOT தொழிற்சாலை, 7. காங்கேயநல்லூர்சத்துவாச்சாரி பாலாற்று பாலம்., 8. கல்புதூர்ஆரப்பாக்கம் (இரத்தினகிரி) வேலூர் சுற்றுவட்ட சாலை,

இப்படி எண்ணற்ற திட்டங்களை பெற்று வந்த காட்பாடி தொகுதிக்கு இன்றைக்கு இன்னுமோர் அரிய பெரிய திட்டம் கொண்டுவரப் பட்டுள்ளது.

ஒரு காலத்தில் இரயில் பாதையால் இரண்டாக பிளவுபட்டிருந்த ஊர் காட்பாடி. பின்னர் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அந்த மக்களின் போக்குவரத்திற்காக தொங்கு பாலம் போன்று ஒரு பாலத்தை கட்டினார்கள். அந்தப் பாலத்தின் மீது பெரிய வாகனங்கள் போகிறபொழுது அந்த பாலம் ஊஞ்சலாடும். அந்த பாலத்தின் ஓரத்தில் நடந்து போகிற மக்கள் பிடித்துக் கொள்ள எந்த பிடிமானமும் இருக்காது. உயிரை கையில் பிடித்துக் கொண்டு தான் அந்த பாலத்தை கடப்பார்கள்.

பிறகு, கலைஞர் ஆட்சிக்கு வந்த பிறகு அந்த பாலத்தை நவீனமாக்கி இரு வழி பாதையாக கட்டிக் கொடுத்தார்.

ஆனாலும், வளர்ந்துவரும் வாகனங்களின் எண்ணிக்கையால் அந்த பாலத்தில் அதிகமாக போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே, அந்த போக்குவரத்து நெரிசலை குறைக்க இன்னுமொரு பாலம் அமைந்தால் நன்றாக இருக்கும் என்று பொதுமக்கள் நீண்ட காலமாக ஒரு கோரிக்கை வைத்திருந்தார்கள்.

மக்களின் கோரிக்கையை ஏற்று, பழைய பாலத்திற்கு பக்கத்திலேயே சுமார் 25 கோடி ரூபாய் செலவில் இன்னொரு இருவழிப் பாதை கோரப்பட்டுள்ளது. மேம்பாலம் கட்டுவதற்கு Tender கோரப் பட்டுள்ளது. இந்தப் பாலத்தை கட்டி முடித்து பயன்பாட்டிற்கு வரும் போது காட்பாடி இரயில்வே பாலத்தின் மீது தற்போது ஏற்படுகிற நெரிசல் முழுவதுமாக குறையும்.

இவ்வாறு பொதுச் செயலாளர் - நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் தமிழ்நாடு சட்டப்பேரவையில்

# ‘லாட்டிமர் ஹவுஸ்’ கோட்பாடுகள் கடைப்பிடிக்கப்படும்!

## கானா நாட்டின் காமல்வெல்த் மாநாட்டில் தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேச்சு!

*அக்ரா (கானா நாடு), அக். 7 -*

*முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் தமிழ்நாடு சட்டப் பேரவையில் சட்டமன்றம், நீதிமன்றம் மற்றும் நிர்வாகம் தொடர்பான லாட்டிமர் ஹவுஸ் கோட்பாடுகள் கடைப்பிடிக்க முயற்சி மேற்கொள்ளப்படும் என்று பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேசுவையில் குறிப்பிட்டார்.*

*காமன்வெல்த் பாராளுமன்ற சங்கத்தின் 66-வது மாநாடு, கானா நாட்டின் தலைநகர் அக்ரா நகரத்தில், அக்டோபர் திங்கள் 4 ஆம் நாள் நடைபெற்ற கருத்தரங்கில் பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேசியதாவது:*

*2003 ஆம் ஆண்டு சட்டமன்றம், நீதிமன்றம் மற்றும் நிர்வாகம் ஆகியவற்றில் அதிகார பகிர்வுகள் மற்றும் ஊடுருவல்கள் குறித்து லாடிமர் ஹவுஸ் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டதிலிருந்து, பல காமன்வெல்த் நாடுகளில் அதிகாரப் பகிர்வுகளை உறுதிப்படுத்துவதிலும், நல்லாட்சியை மேம்படுத்துவதிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என நான் கருதுகிறேன். இருந்த போதிலும், காமன்வெல்த் நாடுகள் பலவற்றிலும், இக்கோட்பாடுகளை கடைபிடிப்பதில், பல்வேறு சவால்கள் மற்றும் தடைகள் நீடிக்கி ன்றன, மேலும், இந்த கோட்பாடுகள் காமன்வெல்த் நாடுகளில் ஜனநாயக வளர்ச்சி மற்றும் நிர்வாகத்தை தொடர்ந்து வழிநடத்துவதை உறுதி செய்ய தொடர்ந்து முயற்சிகள் தேவை. ஒவ்வொரு உறுப்பு நாடுகளிலும் குறிப்பிட்ட வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் பரவலாக வேறுபடலாம், மேலும், 2023-ல் இந்த கோட்பாடுகளின் நிலை ஒவ்வொரு நாட்டின் தனிப்பட்ட சூழ்நிலைகளைப் பொறுத்தது என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டியது அவசியம்.*

*தமிழ்நாட்டில் 5 முறை முதலமைச்சராக பொறுப்பேற்று, செம்மையாக ஆட்சி செய்து, தான் போட்டியிட்ட 13 சட்டமன்றத் தேர்தல்களிலும் வெற்றிபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் நேரத்தில், திறமையான நிர்வாகத்தை வழங்கி, தமிழ்நாடு முன்னேற்றத்திற்கான வளர்ச்சிப் பணிகளை நாள்தோறும் வழங்கிவரும், நமது அன்புக்குரிய தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆட்சிக்காலத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளில் லாட்டிமர் ஹவுஸ் கோட்பாடுகளை கடைப்பிடிக்க அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறேன்.*

*மேலும், சட்டமன்றம், நீதிமன்றம் நிர்வாகம் ஆகிய ஒவ்வொரு பிரிவும் ஒன்றோடுஒன்று இணைந்து செயல்படும் என உறுதியாக நம்புகிறேன்.*

*இந்த மாநாட்டில் பங்கேற்க எனக்கு வாய்ப்பு கிடைத்தது குறித்து என்னுடைய மகிழ்ச்சியை தெரிவித்துக்கொள்வதோடு, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.*

*இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் பேசினார்.*



தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு அவர்கள் 04.10.2023 அன்று கானா நாட்டில் நடைபெற்ற 66வது காமன்வெல்த் பாராளுமன்ற மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினார். உடன், தமிழ்நாடு சட்டப்பேரவைச் செயலாளர் முனைவர் கி.சீனிவாசன் உள்ளார்.



மதுரை மன்னர் திருமலை நாயக்கர் அரண்மனையில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு பணிகளை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்த போது எடுத்தபடம். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, பூமிநாதன், ஆ.வெங்கடேசன், மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் மற்றும் அதிகாரிகள் உள்ளனர்.



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி ஒன்றியம் பூம்புகார் புதுக்குப்பம் கிராமத்தில் மீனவளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் கடற்கரை முகத்துவாரம் அருகே கடல் அரிப்பை தடுக்க கடலில் கருங்கற்களால் அமைக்கப்பட்ட சிறிய நேர்கல் சுவர் மற்றும் வலைப்பின்னும் கூடக் கட்டடத்தை சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி.மகாபாரதி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமாமகேஸ்வரிசங்கர் மற்றும் பலர் உள்ளனர்.

தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவுபெற்ற -

# 148 பெண் ஓட்டுநர்கள் - 2 திருநங்கை ஓட்டுநர்களுக்கு ஆட்டோ ரிக்சா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, அக். 7-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (5.10.2023) சென்னை, தீவுத் திடலில் நடைபெற்ற விழாவில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலா ளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 500 பெண் ஓட்டுநர்கள் மற்றும் திருநங்கை ஓட்டுநர்களுக்கு புதிய ஆட்டோ ரிக்சா/ தொழில்முறை டாக்சி வாகனம் வாங்குவதற்கு 1 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ், 148 பெண் ஓட்டுநர்கள் மற்றும் 2 திருநங்கை ஓட்டுநர்களுக்கு புதிய ஆட்டோ ரிக்சாக் களை வழங்கும் விதமாக கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

அதன் விபரம் வருமாறு:-

2022-2023 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையில் "தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற பெண் ஓட்டுநர்கள், சொந்தமாக ஆட்டோ ரிக்சா வாகனம் வாங்குவதை ஊக்குவிக்கவும், அவர்களுக்கான சுயதொழில் வாய்ப்பினை உருவாக்கவும், அவர் களின் வருமானம் ஈட்டும் திறன் மற்றும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் பொருட்டும், 500 பெண் ஓட்டுநர்களுக்கு புதியதாக ஆட்டோ ரிக்சா வாகனம் வாங்கும் செலவினத்தில் தலா 1 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, முதலமைச்சர் அவர்களால் 10.07.2023 அன்று தலைமைச் செயலகத்தில், பத்து பெண் பயனாளிகளுக்கு புதிய ஆட்டோ ரிக்சாக் களுக்கான பதிவு ஆவணங்கள் மற்றும் அனுமதி ஆவணங்கள் வழங்கப்பட்டு இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

மேலும், 15.08.2023 அன்று நடைபெற்ற சுதந்திர தின விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருநங்கை ஓட்டுநர்களுக்கும் இம்மானியத் திட்டத்தினை நீட்டித்து அறிவிப்பு வெளியிட்டார்.

அதன் தொடர்ச்சியாக, வாரியத்தில் பதிவு பெற்ற 500 பெண் ஓட்டுநர்களுக்கு மின்சாரம் / சி.என்.ஜி. / எல்.பி.ஜி. மூலம் இயங்கக் கூடிய ஆட்டோ ரிக்சா வாகனம் வாங்க தலா 1 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கும் திட்டத்தினை தொழில்முறை டாக்சி வாகனம் வாங்குவதற்கும், திருநங்கை ஓட்டுநர்களுக்கும் நீட்டித்து 16.08.2023 அன்று அரசாணை வெளியிடப்பட்டது.

அதன்படி, சென்னை, தீவுத்திட லில் நேற்று முன்தினம் நடைபெற்ற விழாவில், முதலமைச்சர் அவர்கள் 148 பெண் ஓட்டுநர்கள் மற்றும் 2 திருநங்கை ஓட்டுநர்களுக்கு புதிய ஆட்டோ ரிக்சா / தொழில்முறை டாக்சி வாகனம் வாங்குவதற்கு 1 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட புதிய ஆட்டோ ரிக்சா வாகனங்களை வழங்கும் விதமாக கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மேலும், பெண் ஓட்டுநர்கள் மற்றும் திருநங்கை ஓட்டுநர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கினார்.

இவ்விழாவில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன்,இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன், பெருநகர சென்னை மாநக ராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, துணை மேயர் மு. மகேஷ் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

உலக சுற்றுலாப் பயணிகள் விரும்பும் வகையில்

# தமிழ்நாட்டை மேம்படுத்த பல்வேறு திட்டப் பணிகள்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வுக் கூட்டத்தில் பேச்சு



சென்னை, அக். 7 -

சுற்றுலா மேம்பாட்டுத் திட்டப்பணிகள், உலக சுற்றுலா பயணிகளின் விருப்பமான முக்கிய சுற்றுலாத்தலமாக தமிழ்நாட்டை உருவாக்கும் என்று சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத்துறையின் மூலம் மேற்கொள்ளப் பட்டுவரும்திட்டப்பணிகள் குறித்த சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசுமுதன்மைசெயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் டாக்டர்.க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடுசுற்றுலாவளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநர்.சந்தீப்நந்தூரி ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம்(05.10.2023) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேசுகையில் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்களின்நடவடிக்கைகளால்இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிகஅளவில்வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முதன்மை சுற்றுலா மையமாக முன்னேறி உள்ளது. தமிழ்நாட்டிற்கு ஆண்டு முழுவதும் அதிக சுற்றுலா பயணிகள் வருகை தரும் வகையில் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகளை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள்.

கன்னியாகுமரியில்உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையை இரவிலும் கண்டு மகிழும் வகையில் ரூ.11.98 கோடி மதிப்பீட்டில் லேசர் தொழில்நுட்ப உதவியுடன் ஒளியூட்டம் மேற்கொள்ளும் பணிகளும், தமிழ் பண்பாடு மற்றும் பாரம்பரிய சின்னமாக விளங்கிய துறைமுக நகரமான பூம்புகாரில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களா ல் கட்டப்பட்ட பூம்புகார் கலைக்கூடம் ரூ.23.60கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகளும், பிச்சாவரம் சுற்று லாத்தலத்தினை ரூ.14.07 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வசதிகளுடன் மேம்படுத்தும் பணிகளும்,தருமபுரிமாவட்டம் ஒகேனக்கல் சுற்றுலா த்தலத்தினை ரூ.17.57 கோடி மதிப்பீட்டில்மேம்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

முட்டுக்காடு படகு இல்லத்தில் ரூ.5 கோடி மதிப்பீட்டில்தனியார்மற்றும்பொது பங்களிப்பு திட்டத்தின் கீழ் 200நபர்கள்அமரும்வகையிலான இரண்டு அடுக்குகள் கொண்ட மிதவை உணவக கப்பல் அமைக்கும் பணி விரைந்து நடைபெற்று வருகின்றது. மாமல்லபுரத்திற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் பொழுதுபோக்கிற்காக தனியார் மற்றும் பொது பங்களிப்பு திட்டத்தின் கீழ் ரூ.8 கோடி மதிப்பீட்டில் உலகத் தரத்திலானஒளிரும்பூங்காஅமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கொல்லிமலையை பல்வேறு வசதிகளுடன் கூடிய முக்கிய சுற்றுலாத்தலமாக மாற்றும் பணிகள் ரூ.2.22 கோடி மதிப்பீட்டிலும், உதகை படகு குழாமில் ரூ.3.20 கோடி மதிப்பீட்டில் மரவீடுகள், மரத்தின் மேல் வீடுகள், குடில் வீடுகள் உள்ளிட்ட சுற்றுலாமேம்பாட்டு பணிகளும், ஜவ்வாது மலையில் ரூ.2.91 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா மேம்பாட்டு பணிகளும், ஏலகிரி மலையில் ரூ.2.98 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா மேம்பாட்டு பணிகளும்,திருப்பூர்மாவட்டம் ஆண்டிபாளையம் ஏரியில் ரூ.1.47 கோடி மதிப்பீட்டில் படகு சவாரி, நீர் விளையாட்டுகள் உள்ளிட்டவசதிகள்ஏற்படுத்தும் பணிகளும்,தருமபுரிமாவட்டத்தில் உள்ள வத்தல் மலையில் ரூ.2.23 கோடி மதிப்பீட்டில் சாகச சுற்றுலா, திறந்த வெளி முகாம்கள் அமைத்தல் உள்ளிட்ட சுற்றுலா மேம்பாட்டு பணிகளும் நடைபெற்று வருகின்றன.

'தென்னிந்தியாவின் ஸ்பா" என்று அழைக்கப்படும் குற்றாலத்தை ரூ.11.34 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்படுத்தும் பணிகளும், கன்னியாகுமரி மாவட்டம் முட்டம் கடற்கரைமற்றும்திற்பரப்பு நீர்வீழ்ச்சிஆகியசுற்றுலாத்தலங்களில் ரூ.7.09 கோடி மதிப்பீட்டில் சுற்றுலாத்தல மேம்பாட்டு பணிகளும், தூத்துக்குடி கடற்கரையை ரூ.1.70 கோடி மதிப்பீட்டில் நீர் விளையாட்டுக்கள் மற்றும்கடற்கரைவிளையாட்டுகள் உள்ளிட்ட பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்கள்கொண்டகடற்கரைசுற்றுலாத் தலமாக மேம்படுத்தப்படுத்தும் பணிகளும், புதுக்கோட்டைமாவட்டத்தில் உள்ள முத்துக்குடா கடற்கரைப் பகுதியை ரூ.3.06 கோடி மதிப்பீட்டில் நீர்விளையாட்டுகள், படகு சவாரி, நடைபாதை, கடற்கரை விளையாட்டுகள் மற்றும் அடிப்படை வசதிகள் கொண்டசுற்றுலாத்தலமாக மேம்படுத்தப்படுத்தும்பணிகளும்மேற்கொள்ளப்பட்டு அதனை செயல்படுத்தும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

சுற்றுலா தலங்களில் வளர்ச்சித்திட்டப்பணிகளை மேற்கொள்ளும் போது வாகன நிறுத்தும் இடம், சுகாதார வளாகம் அமைத்தல்பணிகளுக்குமுக்கியத்துவம் அளிக்க வேண்டும். பணிகள் குறித்த காலத்திற்குள் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் சுற்றுலா அலுவலர்கள்பணியாற்றிட வேண்டும். அறிவிக்கப்பட்டுள்ள சுற்றுலா திட்டப்பணிகள் அனைத்தும் டிசம்பர் மாதத்திற்குள் பயன்பா ட்டிற்கு வரும் வகையில் விரைந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும். சுற்றுலாமேம்பாட்டுத் திட்டப்பணி கள், உலக சுற்றுலா பயணிகளின் விருப்பமான முக்கிய சுற்றுலாத்தலமாக தமிழ்நாட்டை உருவாக்கும்

இவ்வாறு அமைச்சர் கா. ராமச்சந்திரன்தெரிவித்தார்.

இக்கூட்டத்தில்மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொதுமேலாளர்திருமதி.இ. கமலா, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகதிட்டபொறியாளர், உதவி செயற்பொறியாளர்கள் சுற்றுலாத்துறை உயர் அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகஅலுவலர்கள்கலந்து கொண்டனர்.

---



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கான நேர்காணல்

### இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு அனைத்துக் கழக மாவட்டங்களில் இருந்தும் விண்ணப்பங்கள் வந்துள்ளன. அவற்றில் மண்டலம்–4 மற்றும் மண்டலம்–5–ல் உள்ள மாவட்டக் கழகங்களில் மேற்கண்ட பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் கீழ்க்கண்டவாறு நடைபெறுகின்றது.

சேலம் கிழக்கு, சேலம் மத்திய, சேலம் மேற்கு மாவட்டக் கழகங்களுக்கு வருகிற 09.10.2023 திங்கள்கிழமையும், நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகங்களுக்கு 10.10.2023 செவ்வாய்க்கிழமையும், ஈரோடு தெற்கு, ஈரோடு வடக்கு மாவட்டக் கழகங்களுக்கு 11.10.2023 புதன்கிழமையும், கோவை மாநகர், கோவை தெற்கு, கோவை வடக்கு மாவட்டக் கழகங்களுக்கு 12.10.2023 வியாழக்கிழமையும், நீலகிரி மாவட்டக் கழகத்துக்கு 13.10.2023 வெள்ளிக்கிழமையும் நேர்காணல் நடைபெறும். விண்ணப்பித்தவர்கள் அனைவரும் நேர்காணலில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### மண்டலம்–4

| வ. எண் | கழக மாவட்டம் | நாள் | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | சேலம் கிழக்கு | 09/10/2023 | காலை 9.00 மணி | ரத்தினவேல் ஜெயக்குமார் திருமண மண்டபம், ஐந்து ரோடு, சேலம். |
| 2 | சேலம் மத்திய | 09/10/2023 | மதியம் 12.00 மணி | |
| 3 | சேலம் மேற்கு | 09/10/2023 | மதியம் 2.00 மணி | |
| 4 | நாமக்கல் கிழக்கு | 10/10/2023 | காலை 9.00 மணி | நளா ஹோட்டல், திருச்சி சாலை, நாமக்கல். |
| 5 | நாமக்கல் மேற்கு | 10/10/2023 | மதியம் 2.00 மணி | கொங்கு திருமண மண்டபம், திருச்செங்கோடு |
| 6 | ஈரோடு தெற்கு | 11/10/2023 | காலை 9.00 மணி | ஸ்ரீ தங்கம் மஹால், மேட்டுக்கடை – பெருந்துறை ஆர்.எஸ்.சாலை, ஈரோடு. |
| 7 | ஈரோடு வடக்கு | 11/10/2023 | மதியம் 2.00 மணி | ஸ்ரீ கார்த்திகேயன் மஹால், காலேஜ் பிரிவு, கரட்டிபாளையம், கோபிசெட்டிபாளையம். |

### மண்டலம்–5

| வ. எண் | கழக மாவட்டம் | நாள் | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | கோவை மாநகர் | 12/10/2023 | காலை 9.00 மணி | சுகுணா மினி ஹால் காளப்பட்டி சாலை, கோவை. |
| 2 | கோவை தெற்கு | 12/10/2023 | மதியம் 11.00 மணி | |
| 3 | கோவை வடக்கு | 12/10/2023 | மதியம் 2.30 மணி | |
| 4 | நீலகிரி | 13/10/2023 | காலை 10.00 மணி | கலைஞர் அறிவாலயம், மாவட்டக் கழக அலுவலகம், உதகை. |

நேர்காணலில் கலந்துகொள்ள வரும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய வயதை நிரூபிப்பதற்கான கல்விச் சான்றிதழ், ஆதார் அட்டை, கழக உறுப்பினர் அட்டை, இளைஞர் அணி போன்ற கழக அமைப்புகளில் ஏற்கெனவே பணியாற்றியிருந்தால், அதுதொடர்பான புகைப்படத் தொகுப்பு மற்றும் ஆவணங்களைக் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

"அன்பகம்"
சென்னை – 18.
நாள் : 05–10–2023.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி

---

தொ.அ.ரவி - திப்பம் பட்டி ஆறுச்சாமி - சு.சுரேந்திரன் பங்கேற்பு!

# காரமடை மேற்கில் கழக அரசின் சாதனை விளக்கக் கூட்டம்!

## அமைச்சர் சு.முத்துசாமி - ஆ.இராசா எம்.பி.சிறப்புரை!

சென்னை,அக்,7-

கோவை வடக்கு மாவட்டம்,காரமடை மேற்கு ஒன்றியம் சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டம் நாளை (8.10.2023 - ஞாயிற்றுக்கிழமை) நடைபெறுகின்றது.

இக் கூட்டம்அன்று மாலை 4 மணிக்கு கள்ளார் பாளையம்,சிங்காரம் பாளையம் ஊராட்சியிலும், மாலை 4.30 மணிக்கு திம்மம் பாளையம் புதூரிலும், மருதூர் ஊராட்சியிலும், 5 மணிக்கு கனுவாபாளையம் பிரிவிலும், காளம்பாளையம் ஊராட்சீயிலும், மாலை 5.30 மணிக்கு தோலம்பாளையம், தோலம்பாளையம் ஊராட்சியிலும் நடைபெறுகின்றது.

இக்கூட்டத்தில் ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா எம்.பி., அமைச்சர் சு.முத்துசாமி, மாவட்டச் செயலாளர்தொ.அ.ரவி ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

மாநில ஆதி திராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் திப்பம் பட்டி ஆறுச்சாமி விளக்கவுரையாற்றுகிறார்.

ஒன்றியச் செயலாளர் சு.சுரேந்திரன் நன்றி கூறுகிறார்.

---

## ரூ.450 கோடி

# கடனாக பெற டெண்டர்!

## மெட்ரோ நிர்வாகம் தகவல்!

சென்னை, அக். 7-

கூடுதல் பெட்டி, தானியங்கி வசதிக்காக ரூ.450 கோடி தேவைப்படுகிறது. அதை கடனாக பெற மெட்ரோ நிர்வாகம் டெண்டர் கோரியுள்ளது. சென்னையில் மெட்ரோ ரயிலில் காலை மற்றும் மாலை நேரங்களில் பொதுமக்கள் கூட்ட நெரிசலோடு பயணிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், கூடுதலாக இரண்டு பெட்டிகளை இணைக்க சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் முடிவு செய்தது. அதன் அடிப்படையில் ஜிகா எனப்படும் ஜப்பான் நிதி நிறுவனத்திடம் ஒரு பெட்டிக்கு ரூ.10 கோடி வீதம் 180 பெட்டிகளை வாங்க நிதி கேட்கப்பட்டுள்ளது.

---



பெரம்பலூர் மாவட்டம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மண்டல அமைப்புச் செயலாளர் இரா.கிட்டு – செல்வராணி ஆகியோரது புதல்வி கி.கிருத்திகா – செ.ராதாகிருஷ்ணன் ஆகியோரது திருமணம் அண்மையில் நடைபெற்றது. மேனாள் ஒன்றிய அமைச்சர் கழக துணைச் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., அவரது இல்லம் சென்று மணமக்களை வாழ்த்தினார். இதில் மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், ஒன்றிய செயலாளர்கள் எம்.ராஜ்குமார், வீ.ஜெகதீசன், எஸ்.நல்லதம்பி, வேப்பந்தட்டை ஒன்றிய பெருந்தலைவர் க.ராமலிங்கம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரிபாஸ்கர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.ஆர்.சிவசங்கர் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



கழக தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மாவட்ட கழக அலுவலகம் தளபதி அரங்கில் தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி தலைமையிலும், தருமபுரி சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் – மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் டாக்டர்.ஏ.கே. தருண் முன்னிலையிலும் தருமபுரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.கூட்டத்தில் மாவட்டப் பொருளாளர் வே.தங்கமணி, பென்னாகரம் தொகுதி பொறுப்பாளர் கோபி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.ஜி.சேகர்,பொதுக்குழு உறுப்பினர்கள் நடராஜ்,சரஸ்வதி பி.சி.துரைசாமி,மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, கழக நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.



நேற்று முன்தினம் (05.10.2023) சென்னை, தலைமைச் செயலகம், வேளாண்மை துறை கூட்டரங்கில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடும் வகையில் அமைக்கப்பட்ட குழுக்களில் "எழுத்தாளர் – கலைஞர்" என்ற குழுவின் கூட்டம், இக்குழுவின் தலைவரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இணைத் தலைவர்கள் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி.என். கயல்விழி செல்வராஜ், உறுப்பினர் செயலரும், சமூகநலத் துறை ஆணையருமான திருமதி வே.அமுதவல்லி, உறுப்பினர்கள் ஆர்.பூரணலிங்கம், ஆர். பாலகிருஷ்ணன், ஏ.எஸ். பன்னீர்செல்வன், கலாப்பிரியா. எஸ்.ராமகிருஷ்ணன், திருமாவேலன், இமையம், அறிவுமதி, வி.எம்.எஸ்.சுபகுணராஜன், கவிஞர் சல்மா, தமிழ்மகன், பொதியவெற்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திராவிடர் கழகத்தின் சார்பில் தஞ்சையில் - முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# 'சமூகநீதிக்கான சரித்திர நாயகர்' - முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பாராட்டு விழா!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில்! முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏற்புரை!

சென்னை,அக்.7-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா, 'சமூக நீதிக்கான சரித்திர நாயகர்' தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பாராட்டு விழா தாய்க்கழகமாம் திராவிடர் கழகத்தின் சார்பில் தஞ்சை மாநகரில் எழுச்சியுடன் நேற்று (6.10.2023) மாலை நடைபெற்றது.

தஞ்சை மாநகரமே விழாக்கோலம் பூண்டது. வரவேற்பு தோரணங்கள், கழகக்கொடிகள் அமைக்கப்பட்டு உற்சாக மிகுதியில் தஞ்சை மாநகரம் திகழ்ந்தது. திராவிடர் கழகம், தி.மு.க. உள்ளிட்ட சமூகநீதியில் அக்கறை கொண்டுள்ளவர்கள் தங்களின் குடும்ப விழாவாக கருதி விழாவுக்குத் திரண்டனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா, 'சமூக நீதிக்கான சரித்திர நாயகர்' தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பாராட்டு விழா திராவிடர் கழகத்தின் சார்பில் நேற்று (6.10.2023-வெள்ளிக்கிழமை) மாலை 5 முதல் 8:30 வரை தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையம் அருகில் மாநகராட்சி மாநாட்டு அரங்கத்தில் தஞ்சை எஸ்.என்.எம். உபயதுல்லா நினைவரங்கம் இராஜகிரி கோ.தங்கராசு நினைவு மேடையில் நடைபெற்றது.

கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன் வரவேற்புரையாற்றினார்.

கழக செயலவைத் தலைவர் சு.அறிவுக்கரசு, பொதுச் செயலாளர்கள் முனைவர் துரை.சந்திரசேகரன், வீ.அன்புராஜ், பொருளாளர் வீ.குமரேசன், மாநில ஒருங்கிணைப்பாளர்கள் தஞ்சை இரா.ஜெயக்குமார், உரத்தநாடு இரா.குணசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

**'தாய் வீட்டில் கலைஞர்' நூல் வெளியீடு!**

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தொகுத்த 'தாய் வீட்டில் கலைஞர்' நூலை தமிழ்நாடு முதலமைச்சர் வெளியிட, முதல் படியை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பெற்றுக் கொண்டார். தஞ்சை மத்திய தி.மு.க. மாவட்டச் செயலாளர் - சட்டமன்ற உறுப்பினர் துரை.சந்திரசேகரன், தி.மு.க. உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் -நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் - சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி. நீலமேகம், தஞ்சை மாநகர தி.மு.க.செயலாளர், - மேயர் சண்.இராமநாதன், தி.மு.க. மருத்துவரணி மாநில துணைச் செயலாளர் - துணை மேயர் டாக்டர் அஞ்சுகம்பூபதி ஆகியோர் நூலைப் பெற்றுக்கொண்டனர்.

**விழாவில் பாராட்டுரை!**

சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதிபதி ஜி.எம்.அக்பர் அலி, மேற்கு வங்க மாநில மேனாள் தலைமைச் செயலாளர் ஜி.பாலச்சந்திரன் அய்.ஏ.எஸ்., தவத்திரு பாலபிரஜாபதி அடிகளார் ஆகியோர் பாராட்டுரை ஆற்றினர்.

திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விழாத் தலைமையேற்று சிறப்புரை, பாராட்டுரை ஆற்றினார்.

'சமூகநீதிக்கான சரித்திர நாயகர்' தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நிறைவுரை ஏற்புரை ஆற்றினார்.

தஞ்சாவூர் மாவட்ட கழகத் தலைவர் வழக்குரைஞர் சி. அமர்சிங் நன்றியுரை ஆற்றினார்.

கழகத் துணைப் பொதுச் செயலாளர் ச.பிரின்சு என்னாரெசு பெரியார் இணைப்புரை வழங்கினார்.

விழாவில், தி.மு.க. உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எல்.கணேசன், தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தரம், தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் கா.அண்ணா துரை, மயிலாடுதுறை தொகுதி நாடாளுமன்ற தி.மு.க. உறுப்பினர் செ.இராம லிங்கம், அரசு தலைமைக் கொறடா சட்டமன்ற உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், தி.மு.க.தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர் நா.அசோக்குமார், து.செல்வம், சட்டமன்ற மேனாள் உறுப்பினர் எம்.இராமச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன், சட்டமன்ற மேனாள் உறுப்பினர் கே.டி.மகேஷ் கிருஷ்ண சாமி, தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் ச.இறைவன், தஞ்சை மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர், தி.மு.க. உஷா புண்ணிய மூர்த்தி, தஞ்சை ஒன்றியக் குழுத் தலைவர், தி.மு.க. வைஜெயந்திமாலா கேசவன் உள்பட தி.மு.க. பொறுப்பாளர்கள் பங்கேற்றனர்.

